Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 32 இதழ் - 5 மே 2019

தனிப்பிரதி ரூ.10/-

## 22-ம் வேனிற்கால வோதாகம முகாம் மே 7-9, 2019
## ஏலகிரிமலை



முகாமில் கலந்துகொண்ட ஊழியர்கள் மற்றும் சகோதரர்கள்

முகாமில் கலந்துகொண்ட சகோதரிகள்



முகாமில் கலந்துகொண்ட வாலிப சகோதரிகள்



## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| நிறைவானது வரும்போது... | 11 |
| பெண்கள் பகுதி | 15 |
| வாலிபர் பகுதி | 19 |
| சிறுவர் பகுதி | 22 |
| வேதவினா போட்டி | 24 |
| அன்பிலே அதிகமாய் பெருக... | 25 |
| ஓடுங்கள் | 28 |
| உங்கள் பிள்ளைகள் ஆசீர்வாதமாய்... | 32 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 35 May - 2019 Issue - 5


ஆசிரியர் உரை

## தேவ தூதரும் ஆசையாயிருக்கிறார்கள்

**ஆ**சை என்பது மானிடம் முழுவதற்கும் பொதுவான ஒன்று. எலும்பில்லாத ஒரு மனிதனைக் கூடப் பார்த்து விடலாம். ஆனால், ஆசையில்லாத ஒரு மனிதனைப் பார்க்கவே முடியாது. எனக்கு ஆசையே இல்லை என்று யாராவது சொன்னால், அப்படிப் பட்டவனை மொடாப் புளுகன் என்று எந்த சந்தேகத்திற்கும் இடமில்லாமல் நாம் முத்திரை குத்திவிடலாம். இந்த ஆசை, ஏதேன் தோட்டம் துவங்கி மனிதனை வாட்டி வதைத்து வருகிறது. அன்றைக்கு ஆதிப் பெற்றோருக்குள்ளாகப் புகுந்த ஆசை, இன்றளவும் மனித உள்ளங்களில் நிரந்தரமாகக் குடியிருந்து அசைக்க முடியாத அளவில் கோலோச்சி வருகிறது. ஆம், ஆதாமும், ஏவாளும் தேவ கட்டளையை மீறி, உலகத்தில் பாவம் பிரவேசிக்கச் செய்ததற்கு அடிப்படை ஆசைதான். நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்து, வாயிலே வஞ்சனை ஏதும் காணப்படாமல் வாழ்ந்த அருமை ஆண்டவர் இயேசுவைக் கயவன் யூதாஸ் காட்டிக் கொடுத்ததற்கு அடிப்படையும் ஆசை தான். புதிய ஏற்பாடு எடுத்துச் சொல்லும் பரிசுத்த வாழ்வு வாழ முடியாமல் மெய் கிறிஸ்தவம் தட்டுத் தடுமாறுவதற்கான காரணமும் ஆசைதான். இப்படிப்பட்ட ஆசை மனிதர்களாகிய நமக்குள்ளாகப் பல ரூபங்களில் குடியிருந்து நம்மை அலைக் கழிக்கிறது. சில நேரங்களில், இதன் கோரத்தன்மை வெளியில் தெரியும். பல நேரங்களில், வெளியில் தலைகாட்ட வெட்கப்பட்டுப் பதுங்கி உள்ளேயே கிடந்து வேலையைக் காட்டும். எப்படி நான் சொல்லுவது கொஞ்சமாகிலும் சரிதானே!

சரி, தொடர்ந்து பார்ப்பதற்கு முன்பாக, நமது வழக்கத்தின்படியாக, இத்தலைப்புக்கான பின்னணி குறித்துக் கொஞ்சம் பார்த்து விடுவோம்.

நமது தலைப்பு இடம் பெற்றிருக்கும் வசனம் பேதுரு அப்போஸ்தலனின் முதலாம் நிருபத்தின் முதல் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது. இந்நிருபத்தின் மையக்கருத்து **நம்பிக்கை.** தன்னுடைய நிருபங்களில் இவர் நம்பிக்கை குறித்து வலியுறுத்திப் பேசுவதால் வேத அறிஞர்கள் இவரை **நம்பிக்கை அப்போஸ்தலன்** என்று அழைக்கின்றனர். யோவான் **அன்பின் அப்போஸ்தலன்** என அழைக்கப்படுவது நியாயமானால், பவுல் **விசுவாசத்தின் அப்போஸ்தலன்** என அழைக்கப்படுவது சரியானால், நம் பேதுரு நம்பிக்கை அப்போஸ்தலன் என்று அழைக்கப்படுவதும் முறையானதே.

இந்த முதலாம் நிருபம், சொந்த மண்ணை விட்டு, அந்நிய நாடுகளில் சிதறடிக்கப்பட்ட நிலையில் பரதேசிகளாய் வாழ்ந்து கொண்டு, அதேசமயம் கிறிஸ்துவுக்கும் தங்களை ஒப்புக் கொடுத்து வாழ்ந்தவர்களுக்கும் எழுதப்பட்டுள்ளது [1பேதுரு.1:1,2]. இதில் கிறிஸ்தவ ஜீவியத்திற்கு எதிராக, வெளியே இருந்து வரும் பிரச்சனைகள் பற்றியும் [1பேதுரு 4:12], அப்பிரச்சனைகளுக்கு மத்தியில் அவர்கள் நம்பிக்கையோடு வாழ வேண்டியதின் அவசியம் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

பற்றியெரியும் சோதனைகளுக்கு மத்தியில் இவர்கள் நம்பிக்கையோடிருப்பதற்கு எதை எழுதினால் சரியாக இருக்குமென்று எண்ணிய பேதுரு ஆசிரியர், இரட்சிப்பு பற்றி இவர்களுக்குப் பெரிதாக எடுத்துரைப்பது தனது நோக்கத்திற்கு வலுசேர்க்கும் என்ற முடிவுக்கு வருகிறார். ஆகவே, தான் ஆவியானவரின் வழிநடத்துதலோடு, இந்நிருபத்தின் ஆரம்பத்திலும், முடிவிலும் இரட்சிப்பு [கிருபை] பற்றியே பேசுகிறார் [1: 5;5:12]. எப்படியாவது, இவர்கள் பெற்றுக்கொண்ட இரட்சிப்பு மிக மேன்மையானதாக இவர்களுக்குக் காணப்படவேண்டும், அதனடிப்படையில் இவர்கள், கடைசி காலத்திலே வெளிப்படப்போகும் சுதந்திரத்திற்கு **நம்பிக்கையோடு** காத்திருக்க வேண்டும், அந்நோக்கத்தை ஈடேற்ற இரட்சிப்பை இவர்கள் ஏற, இறங்கப் பார்க்கத்தக்க அளவு அவர்கள் கண்களுக்கு முன்பாக நிறுத்த வேண்டும். எப்படிப்பட்ட முயற்சி பாருங்கள்! ஒருவனுடைய இரட்சிப்பு எப்படியாவது காப்பாற்றப்பட வேண்டுமென்பதில் இவர் இவ்வளவு அக்கறைப்படுவதற்கான காரணம் நமக்கு நன்றாகவே புரிகிறது. எப்படியெனில், தனது முதல் பிரசங்கத்திலேயே **3000 பேரை** இரட்சிப்புக்குள் வழி நடத்திய மாமனிதராயிற்றே இவர். அத்தோடு தன் உயிரையும் துச்சமென மதித்து அநேகருடைய இரட்சிப்புக்காகப் படாதபாடுபட்டவராயிற்றே [அப்.5:40,41]. பின்னே இவருக்கு இரட்சிப்பு பெரிதாக இருக்காதா? சொல்லுங்கள்.

மனிதனின் இரட்சிப்புக்காகத்தான் பரலோகத்தின் தேவன் பரிசுத்த வேதாகமத்தையே நமக்குத் தந்தருளியிருக்கிறார். இழந்து போன மனிதனைத் திரும்பவும் தன்னிடம் கொண்டு வருவது தான் பரிசுத்த வேதாகமத்தின் ஒட்டுமொத்த செய்தி. **இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்** [லூக்கா.19:10] என்று லூக்கா ஆசிரியர் கூறியிருந்தாலும், உண்மையில் இந்த இரட்சிப்பின்

திட்டம் ஆதியாகமத்திலேயே தொடங்கிவிட்டது. ஆம், ஆதித் தகப்பனாகிய ஆதாமுக்கு இது வாக்களிக்கப்பட்டது [ஆதி.3:15]. அடுத்து, முற்பிதாக்களில் முதலாமவனாகிய ஆபிரகாமுக்கு இது அறிவிக்கப்பட்டது [12:1-4]. தீர்க்க தரிசிகளுக்கு வெளிப்படுத்தப்பட்டது, மற்றும் அப்போஸ் தலர்களால் பிரசங்கிக்கப்பட்டது [அப்.2:40, அப்.16:30-33]. இப்படிப்பட்ட இரட்சிப்பு பற்றித்தான் பேதுரு அவர்களுக்குப் பெரிதாகக் காட்ட முற்படுகிறார்.

இந்த இரட்சிப்பு பற்றி தனது நிருபத்தின் முதல் பகுதியிலேயே கூறி [1:1-2:12]. தான் யாருக்கு எழுதுகிறாரோ அவர்களைத் தன் வழிக்குக் கொண்டுவரப் பிரயாசை எடுக்கிறார். குறிப்பாக, முதலாம் அதிகாரம் 4-12 வசனப் பகுதிகளில், இரட்சிப்பு சம்மந்தமான மூன்று காரியங்களை எடுத்துரைக்கிறார். இதில், மூன்றாவது பகுதியில் தான், இவைகளை உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள் என்ற நமது தலைப்பு இடம் பெற்றுள்ளது. நேரிடையாக, நாம் இப்பகுதிக்குப் போகாமல் முதல் இரண்டு பகுதிகளும், பேதுரு ஆசிரியர் பெரிதாகப் பேசும் இரட்சிப்பு பற்றி என்ன சொல்லுகிறதென்று பார்த்து விட்டுப் பிறகு செல்வோம். சரியா?

### *1 இரட்சிப்பின் ஆசீர்வாதம் (வ.4,5)*

நம்பிக்கை அப்போஸ்தலனால், இரட்சிப்பு பற்றி நமக்குச் சொல்லப்படும் முதல் காரியம், இரட்சிப்பின் மூலம் கிடைக்கும் ஆசீர்வாதம் என்ன என்பது.

இவ்வசனங்களில், பேதுரு அப்போஸ்தலன் சொல்வதைக் கவனியுங்கள். அவர் இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே அழியாததும், மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்திரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார். கடைசிகாலத்திலே ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது [1:4,5].

இவ்வசனங்கள், இரட்சிப்படைந்தவர்களுக்கான ஆசீர்வாதம் பற்றிப் பேசுகிறது. ஆசீர்வாதம், இங்கே, சுதந்திரம் என்றழைக்கப் பட்டுள்ளது. இந்த சுதந்திரம் பற்றி பேதுரு சொல்லும் ஓர் உண்மையை நாம் இங்கே கவனிக்கத் தவறிவிடக்கூடாது. ஆம், கிறிஸ்தவனின் சுதந்திரம், அதாவது இரட்சிப்பு அடைந்த கிறிஸ்தவனுக்கான ஆசீர்வாதம், எதிர் காலத்திலே அதாவது, கடைசி காலத்திலே கிடைக்கக் கூடிய ஒன்று என்று தான் இங்கே கூறப்பட்டுள்ளது. இன்றைய நாட்களில், அநேக அதிகப் பிரசங்கிகள் கதை விடுவது போல், கிறிஸ்தவனாக வாழ்வதற்கான ஆசீர்வாதங்கள் இப்பூமியிலேயே கிடைத்து விடுவதில்லை.

இந்த எதிர்கால ஆசீர்வாதம் பற்றி பேதுரு அப்போஸ்தலன், மூன்று முத்தான வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளார். ஆம், கடைசி காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கும் அந்த ஆசீர்வாதம் அழியாதது, மாசற்றது, வாடாதது என்று. பூமியிலே ஒருவன் தன் சொந்த முயற்சியினாலே, பலத்தினாலே, பணத்தினாலே, செல்வத்தினாலே, செல்வாக்கினாலே பெற்றுக் கொள்ளக் கூடியது எதுவாக இருந்தாலும், அவைகள் கண்டிப்பாக அழிந்துபோகக் கூடியவைகளே! பேதுரு அப்போஸ்தலன் தனது இரண்டாம் நிருபத்தில் **கர்த்தருடைய நாள் வரும்போது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்** என்கிறார் [2பேதுரு 3:10]. வானங்களே மடமடவென்று அகன்று பூதங்களும் வெந்து உருகும்போது, மனிதன் சம்பாதித்தவைகள் அழியாமல் தப்புமா? நிச்சயமாக அழியும், கண்டிப்பாக மாசுபடும், சந்தேகமில்லாமல் வாடிப்போகும், இப்படிப்பட்டவைகளோடு கடைசி காலத்திலே கிடைக்கப்போகும் சுதந்தரத்தை ஒப்பிட்டு, தேவனால் கிடைக்கும் இரட்சிப்பின் அழியாதது, மாசற்றது, வாடாதது என்று கூறுகிறார். இந்த ஆசீர்வாதமாகிய சுதந்திரத்திற்காகத்தான் பழைய ஏற்பாட்டு பக்தர்களும் நம்பிக்கையோடு காத்துக் கிடந்தனர் [எபி.11:13].

நான் இப்படிச் சொல்லும்போது, அப்படியானால், இரட்சிப்பின் வாழ்க்கை வாழ்பவர்களுக்கு இம்மையில் ஆசீர்வாதமே இல்லையா என்று நீங்கள் கேட்கலாம். **இல்லை** என்று வேதமும் சொல்லவில்லை, நானும் சொல்லவில்லை. தயவு செய்து வசனம் 5–ஐ நன்றாகக் கவனியுங்கள். **கடைசிக் காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு.....** என்று கூறப்பட்டுள்ளது. அதாவது, இரட்சிப்படைந்தவர்கள், இப்பூமியில் தேவ பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிறார்களாம். இங்கே பலம் என்பது, மூலமொழியிலே, ராணுவத்திலே பயன்படுத்தப்படும் வார்த்தைக்கு இணையான ஒன்றாகச் சொல்லப்பட்டுள்ளது. எப்படிப்பட்ட பாதுகாப்பைத் தேவன் அவருடைய பிள்ளைகளுக்குக் கொடுக்கிறாரென்று இதன் மூலம் அறிந்து கொள்ளுங்கள்.

அருமையானவர்களே, தேவன் தன்னுடைய பலத்தைக் கொண்டு ஒன்றைக் காப்பாரானால், அல்லது ஒருவரைக் காப்பாரானால் அவர்களை யாராவது ஏதாவது செய்துவிட முடியுமா? நிச்சயமாக முடியாது. ஆகவே, ஒருவன் கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி உண்மையாய் இரட்சிக்கப்பட்டவனாய் வாழ்வானானால், இம்மையிலே தேவ பலத்தோடு கூடிய பாதுகாப்பும், மறுமையிலே தேவனாலே கொடுக்கப்படும் சுதந்திரமும் உண்டு.

ஆகவேதான், அப்போஸ்தலனாகிய பேதுரு, இரட்சிப்பு பற்றி எழுதி அவர்களை நம்பிக்கையோடு காத்திருக்கச் செய்ய, முதலில் இரட்சிப்பின் ஆசீர்வாதங்கள் பற்றிப் பேசியுள்ளார்.

## 2. இரட்சிப்பின் தன்மை (வ.6-9)

நம்பிக்கை அப்போஸ்தலனாகிய பேதுருவால், இரட்சிப்பு பற்றி நமக்குச் சொல்லப்படும் இரண்டாவது காரியம், இரட்சிப்பு எப்படிப்பட்ட தன்மை கொண்டது என்பது.

பொதுவாக, நம் எல்லோருமே கிடைக்கப்போகும் நன்மைகள் பற்றி, ஆசீர்வாதங்கள் பற்றி, தேவ வாக்குத்தத்தங்கள் பற்றி எடுத்துச் சொன்னால், வாய் நிறைய சிரிப்பும் மனம் நிறைய மகிழ்ச்சியும் உண்டாகும். இது மனித இயல்புதான். ஆகவேதான், பெரும்பாலான பிரசங்கிகள் எப்போது வாயைத் திறந்தாலும் ஆசீர்வாதமான வார்த்தைகளை மழையாகப் பொழிந்து தள்ளுவர். அதன் மூலம் தேவையானதையும் பெற்றுக்கொள்வர். ஆனால் நம்ம பேதுரு, அடுத்தவன் பாக்கெட்டில் கையை வைத்து தன் பையை அநியாயமாய் நிரப்ப முயலும் ஒரு பிரசங்கியல்ல. அவருக்கு அப்படிப்பட்ட ஆசையும் கிடையாது, அதற்கான தேவையும் இல்லை. அதுமாத்திரமல்ல, **ஒருவன் போதித்தால், தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்** [4:11] என்று பிரசங்கிக்கும் எல்லோருக்கும் எச்சரிப்பு வேறு கொடுத்துள்ளார். ஆகவே, இரட்சிப்பின் மூலமான ஆசீர்வாதங்களை மாத்திரம் அவர் சொல்லாமல், இரட்சிப்பின் தன்மை பற்றியும் கூறி அவர்கள் யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ளும்படி செய்கிறார். ஓர் உண்மையான பிரசங்கி இப்படித்தான் இருக்க வேண்டும். பிள்ளை பிடிப்பவனைபோல கையிலே ஆசீர்வாதம் என்ற இனிப்பை வைத்துக் கொண்டு யார் ஏமாந்திருப்பார்களோ என்று அலையக் கூடாது.

6-ம் வசனத்தை நாம் கவனித்தால், **இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்** என்கிறார். எதிலே? இரட்சிப்பினாலே இம்மைக்கும் மறுமைக்குமான ஆசீர்வாதம் உண்டு என்பதிலே. அத்தோடு அவர் நிறுத்தியிருக்கலாமே, ஏன் நிறுத்தவில்லை? அங்கேதான் அவருடைய ஆத்தும பாரம் வெளிப்படுகிறது. உண்மையை ஒளிக்காமல் பேசவேண்டுமென்ற ஆதங்கம் தெரிகிறது. என்றாலும், துன்பப்பட வேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக் காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள் என்கிறார்.

இரட்சிப்படைந்தவனே, நீ துன்பப்பட வேண்டும், அது மிகவும் அவசியம். இந்தத் துன்பம் ஏதோ ஒரு சோதனையினாலே வராது. அது பலவிதங்களில் வரும் என்று கூறுகிறார். சரி, இங்குதான் நிறுத்தினாரா, இல்லை அது கொஞ்சக்காலம் என்றும் கூறுகிறார். இவர் இங்கே சொல்லும் கொஞ்சக்காலம் என்பது நம்முடைய கணக்கின்படியான கொஞ்சக்காலம் அல்ல. அதாவது, சில நாட்களோ, சில வாரங்களோ, சில மாதங்களோ அல்ல. இதே பேதுரு தனது இரண்டாம் நிருபத்தில் பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் இருக்கிறது என்கிறார். இதன்படி பார்த்தால் **கொஞ்சக்காலம்** என்பது நமது வாழ்நாள் பூராவும் கூட

இருக்கலாம். தேவனுடைய பல தாசர்கள் இப்படித்தான் வாழ்ந்து மரித்தார்களென்று வேதாகம சரித்திரமும் [எபி.11:36,37] பிற சரித்திரமும் கூறுகிறது.

யோவான் அப்போஸ்தலனும், சிமிர்னா சபையாருக்குச் சொல்லும்போது, பத்து நாள் உபத்திரவம் என்பதோடு நிற்காமல், மரணபரியந்தம் உண்மையாயிரு என்றே கூறியுள்ளார் [வெளி.2:10]. பவுல் அப்போஸ்தலனும் **கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்** என்றே கூறுகிறார் [2தீமோ. 3:12].

இப்படிச் சொன்னால், இவ்வளவு உபத்திரவம் ஒரு கிறிஸ்தவனுக்கு அவசியமா என்று எண்ண வாய்ப்புள்ளதாகையால் 7-ம் வசனத்தில் அவர்களுக்கு விளங்கும் படியான ஓர் உதாரணத்தையும் எடுத்துக் கொடுக்கிறார். அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும் [1பேதுரு. 1:7] என்று. அன்பானவர்களே! இப்படிச் சொல்வதன் மூலம், இக்காலத்துப் பாடுகளைக் குறித்துக் கவலைப்படாமல், நம்பிக்கையோடு கிறிஸ்தவத்தில் நிலைத்திருந்து, நித்திய சுதந்திரத்திற்குப் பங்காளிகளாகுங்கள் என்கிறார். அப்படியானால், கிறிஸ்தவ வாழ்க்கையில் வரும் சோதனைகளைப் பொறுமையோடு ஏற்று சகித்து வெற்றிநடை போட நாம் ஒவ்வொருவரும் தயாரா? சிந்திப்போம்.

### *3. இரட்சிப்பின் சிறப்பு (வச.10-12)*

நம்பிக்கை அப்போஸ்தலனாகிய பேதுருவால், இரட்சிப்புப் பற்றி நமக்குச் சொல்லப்படும் இன்னுமொரு காரியம், இரட்சிப்பு எப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்தது என்பது:

முதலில் இரட்சிப்பின் ஆசீர்வாதம், அடுத்து இரட்சிப்பினிமித்தம் பட வேண்டிய பாடுகள். இதை அறியும்போது இவ்வளவு பாடுகளா என்று அவர்கள் பயந்து அழைக்கப்பட்ட அழைப்பிலிருந்து பின்வாங்கிப் போய்விடக் கூடாது என்பதற்காக, இங்கே அவர்கள் பெற்றுக்கொண்ட இரட்சிப்பின் சிறப்பு பற்றி விளக்குகிறார். உங்களுக்குக் கிடைத்த கிருபையை நீங்கள் இலேசாக எண்ணிவிட வேண்டாம் என்று ஆரம்பித்து, அதற்கான காரணங்களைக் கொடுக்கிறார்.

வசனம் 10-ல், இவர்கள் பெற்றுக்கொண்ட கிருபையைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்த தீர்க்க தரிசிகள், அதைக் குறித்து கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள் என்கிறார். அந்தத் தீர்க்கதரிசிகள் ஏதோ தேவன் உரைத்தார் நாங்கள் அறிவித்தோம் என்று நினைக்காமல் அவர்கள் அறிவித்த கிருபையைக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணியுள்ளார்கள். அப்படியானால் அந்நாட்களில் ஆராய்ச்சி எப்படி நடந்திருக்கும்? தீர்க்கதரிசிகள் அதைக்

குறித்து ஜெபித்திருப்பார்கள், தியானித்திருப்பார்கள் இன்னும் தங்களைப் போன்று தீர்க்கதரிசனம் உரைத்த மற்றவர்களின் தீர்க்கதரிசனங்களோடு தங்களுடையவைகளை ஒப்பிட்டுப் பார்த்திருப்பார்கள் அப்படித்தானே!

வசனம் 11-க்கு வரும்போது, இரண்டாம் ஆராய்ச்சியும் அங்கே நடந்ததாகத் தெரிகிறது. தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்த போது, இன்ன காலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக்காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்துள்ளார்கள். அப்படியானால் இந்த ஆராய்ச்சிக்கான காரணம் என்ன?

முதலாவது, அவர்களுக்குக் கிடைக்கப்போகும் கிருபையின் முழுப்பொருளை அறிந்துகொள்வது. அடுத்து, நமக்கு ஏன் கிடைக்கவில்லை? அவர்களுக்கு ஏன் கிடைக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வது.

அருமையானவர்களே, இத்தீர்க்கதரிசிகள் போல தேவ காரியங்களைக் குறித்து நாம் ஆராய்ந்து பார்க்கும் குணமுடையவர்களாக உள்ளோமா? நம்முடைய ஆண்டவரும் யோவான் 5:39-ல் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் என்று தானே கூறுகிறார். இன்னும் சங்கீதம் 119:81-ல் உம்முடைய இரட்சிப்புக்கு என் ஆத்துமா தவிக்கிறது; **உம்முடைய வசனத்துக்கு காத்திருக்கிறேன் என்றும்** இன்னும் 174-ல் கர்த்தாவே **உம்முடைய இரட்சிப்பின் மேல் ஆவலாயிருக்கிறேன்...** என்றுமல்லவா தாவீது கூறியுள்ளான். இந்த தீர்க்கதரிசிகள் போலும், தாவீது போலும் நாம் இருக்கிறோமா? சொல்லுங்கள்.

ஆண்டவர் இயேசு, மத்தேயு 13:17 ல் கூறும்போது, **அநேக தீர்க்கதரிசிகளும், நீதிமான்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைவகளைக் கேட்கவும் விரும்பியும் காணாமலும், கேளாமலும், போனார்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்** என்றார். பேதுரு ஆசிரியர் இங்கே பேசும் இரட்சிப்பாகிய கிருபை, பழைய ஏற்பாட்டு தீர்க்க தரிசிகளுக்கும், நீதிமான்களுக்கும் கிடைக்கவில்லை. பாவம் அந்த மாமனிதர்கள், தகுதியிருந்தும் தங்கள் வாழ்க்கையில் காண விரும்பியவைகளைக் காணமுடியாமல் போய்விட்டது!

இருப்பினும், கிறிஸ்துவின் காலத்தில் வாழும் நமக்கு அந்தக் கிருபை கிடைத்திருக்கிறதென்றால் நாம் எவ்வளவு பாக்கியம் பெற்றவர்களென்று தயை கூர்ந்து எண்ணிப்பார்ப்போம்.

தீர்க்கதரிசிகளுக்கும், நீதிமான்களுக்கும் கிடைக்காமல் நமக்குக் கிடைத்திருக்கும் இந்த மீட்பின் திட்டத்தைத் தான் தேவதூதரும் உற்றுப் பார்க்க ஆசையாயிருக்கிறார்கள். மீட்பின் திட்டம் உருவானதிலும், மீட்பின் திட்டம் நிறைவேறுவதிலும் தேவதூதர்களுக்குப் பங்கிருந்தது,

இருக்கிறது, இருக்கவும் போகிறது [லூக்கா.1:28, எபி. 1:14, 1தெச. 4:16]. இருப்பினும் அத்திட்டத்தை உற்றுப்பார்க்க அவர்கள் ஆசையாயிருந்திருக்கிறார்கள், இன்னும் இருக்கிறார்கள். அப்படியானால், இதற்கு என்ன காரணம்? அவர்களுக்கு ஏன் இந்த ஆசை? அதுவும் தங்களுக்கு அறிவிக்கப்படாத ஒரு திட்டத்தை அவர்கள் உற்றுப் பார்க்க ஏன் ஆசைப்பட வேண்டும்?

எப்பொழுது நாம் ஒன்றை உற்றுப் பார்ப்போம்? ஒன்றைக் குறித்து அதிக ஆவல் ஏற்படும்போது அல்லது ஒன்றைக்குறித்த சந்தேகம் வலுக்கும்போது, இப்பொருளினடிப்படையில் பார்த்தால், தேவதூதர்கள் உற்றுப்பார்ப்பதற்குப் பலமான காரணங்கள் இருக்கவே செய்கிறது. எப்படியெனில், தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக் கண்ணனாகிய தேவனோடு [ஆப.1:13]. நித்தமும் பொல்லாப்புச் செய்யும் மனிதன் எப்படி ஒன்று சேரப் போகிறான் என்பதையும், ஏதேன் தோட்டத்திலிருந்து ஜீவ விருட்சத்தைத் தொட்டு விடக்கூடாது என்று தேவனால் விரட்டப்பட்ட மனிதன் [ஆதி.3:24] எப்படி ஜீவ விருட்சத்தின் மீது அதிகாரமுள்ளவனாக [வெளி.22:14] மாறப்போகிறான் என்பதையும், ஆதி மேன்மையைக் காத்துக்கொள்ளாத தங்களைப் போன்ற தூதர்களே, மகாநாளின் நியாயத்தீர்ப்புக்காக நித்திய சங்கிலிகளினாலே கட்டப்பட்டிருக்கும்போது [யூதா 6] தேவ தூதனைக் காட்டிலும் சிறியவனான மனிதனுக்கு மாத்திரம் [எபி.2:7] எப்படி இந்த மீட்பின் திட்டம் எப்படி சாத்தியமாகும் என்பதை உற்றுப்பார்க்க ஆசையாயிருக்கிறார்கள்! விளங்குகிறதா?

அருமையானவர்களே, யாருக்காக இந்தத் திட்டம் தீட்டப்பட வில்லையோ அவர்களே இத்திட்டத்தின் மகிமையை உணர்ந்து, அதை உற்றுப்பார்க்க ஆசையாயிருக்கும்போது, நாம் இம்மீட்பின் திட்டம் பற்றிப் பாராமுகமாயிருப்பது தேவனுக்குப் பிரியமாயிருக்குமா? நீதிமான்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் கிடைக்காத பாக்கியம் உனக்குக் கிடைத்திருக்கும்போது நீ அதை அற்பமாய் எண்ணுவதை தேவன் ஏற்றுக்கொள்வாரா? சொல்லுங்கள். இரட்சிப்பின் திட்டத்தை ஆராய்ந்து பார்த்து பயனடையவும், உற்றுப்பார்த்து உயிர்மீட்சி அடையவும் கிடைத்திருக்கும் பாக்கியமான வாய்ப்பைப் பயன்படுத்த மறுப்போமானால், அந்த மகாநாளின்போது தேவன் நம்மை உற்றுப்பார்த்து, **நீ அகன்று போ** என்றும், **நரகாக்கினைக்கு ஓடிப்போ** என்றும் நிச்சயம் சொல்லுவார். மறந்துவிடாதீர்கள்.

ஆகையால், அருமையானவர்களே, தேவதூதர்களே உற்றுப் பார்க்க விரும்பும் கிருபையை, புதிய ஏற்பாட்டு உபதேசப்படி அறிந்து, இதுகாறும் இரட்சிக்கப்படாதிருப்பீர்களானால், இப்பொழுதே விசுவாசித்து [மாற்கு16:16], மனந்திரும்பி [அப். 2:38], இயேசு தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு [அப். 8:37] பாவமன்னிப்புக்கென்று தண்ணீரில் மூழ்கித் திருமுழுக்குப் பெற்று [அப். 22:16] இரட்சிப்படையுங்கள்! ஆமென்!

★

# நிறைவானது வரும்போது ...

**Bro. J.C. சோட்**

பரிசுத்த ஆவியானவரின் பணி என்னும் தொடரின் இறுதிக் கட்டத்திற்கு நாம் வந்துள்ளோம். நிறைவரானது வரும்போது குறைவானது ஒழிந்துபோகும் என அப்போஸ்தலர் பவுல் கூறிய வார்த்தைகளை விட இந்தப் பாடத்திற்கு மிகவும் ஏற்ற தலைப்பு வேறு எதுவாக இருக்க முடியும்? அவருடைய கூற்றுப்படி, நிறைவானது ஒன்று வரவும், குறைவாக அதுவரை இருந்து வந்த ஒன்று முடிந்து போகவும் வேண்டியதாக இருந்தது. இந்த அறிவிப்பில் அவர் குறிப்பிடும் நிறைவானது எது? மேலும், குறைவானது என அவர் குறிப்பிடும் போது எதைப்பற்றி அவர் சொல்லிக்கொண்டிருந்தார்? இவை பற்றி நாம் இங்கே படிக்கப் போகிறோம்.

சத்தியம் மாத்திரம் பிரசங்கிக்கப்படுவதிலிருந்து, எந்தத் தவறும் நேர்ந்துவிடாதபடி, அப்போஸ்தலர்களை அற்புதமாக வழிநடத்த, கிறிஸ்துவானவர், பரிசுத்த ஆவியானவரை அல்லது தேற்றரவாளனை அனுப்புவது பற்றி மீண்டும் மீண்டுமாக நாங்கள் கூறியிருக்கிறோம். அந்தப்படியே, அப்போஸ்தலர்களும், தேவன் அவர்களுக்குக் கொடுத்திருந்த பெரிய பணியில் உதவியாக இருக்கத்தக்கதாக, மேலுமாக சில குறிப்பிட்ட சீடர்களின் மேல் தங்கள் கைகளை வைத்துப் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை கொடுக்கத் தேர்ந்தெடுத்தனர். தேவனால் அவர்கள் அனுப்பப்பட்டிருந்தனர் என்பதை மக்கள் ஏற்றுக்கொள்ளவும், அவர்கள் போதித்த வசனங்களை உறுதிப் படுத்தவும், போதிக்கப்பட்டவர்களிலிருந்து விசுவாசிகளை உண்டாக்கவும் அவை அனைத்தும் நடைபெற்றன. இறுதியாக, புதிய ஏற்பாடு முற்றிலுமாக எழுதப்பட்டு மக்களுக்குக் கொடுக்கப் பட்டபோது, இந்த அற்புத யுகம் ஓய்ந்துபோயிற்று. அன்றிலிருந்து இன்றுவரை, தேவனையும் அவருடைய சித்தத்தையும் தெரிந்துகொள்ள வேண்டியவர்கள் அந்தச் செய்திக்காக புதிய ஏற்பாட்டுக்குச் செல்ல வேண்டியவர்களாக இருக்கின்றனர். விசுவாசம் இன்று தேவனுடைய வசனத்தைக் கேட்பதால் வருகிறது என்று பவுல் நமக்குச் சொல்லுகிறார் ( ரோமர் 10:17). எனவே, நற்செய்தியானது உலக முழுவதும் எடுத்துச் செல்லப்பட வேண்டுமென கிறிஸ்து கட்டளையிட்டார் (மாற்கு 16:15).

நாம் இப்போது கொரிந்தியர் 13–ஆம் அதிகாரத்திற்குச் சென்று அந்தப் பிரசித்தி பெற்ற வசனப்பகுதியைப் படிந்து, தேவனுடைய பூரணமான சட்டம் வருவதைப் பற்றியும், இனி அற்புதங்களுக்குத் தேவை எதுவும் இல்லை என்பது பற்றியும் பவுல் என்ன கூறியிருக்கிறார் என்பதைப் பார்ப்போம்.

இந்த அதிகாரமானது அடிப்படையிலும் அதன் இறுதிப் பகுதியிலும் காண்பது போல, இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரியது என்று அன்பிற்கு முக்கியத்துவம் தரக்கூடியதாக அறியப்பட்டபோதிலும், இன்னும் நாம் தனிக் கவனம் செலுத்த வேண்டிய மற்ற சில கருத்துக்களும் இதில் உள்ளன.

பவுல் சொல்லுவதை தயவு செய்து கவனியுங்கள்: ... அன்பு **ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்து போகும்.** அற்புத யுகத்தில் பவுல் வாழ்ந்தார். அவர் ஒரு அப்போஸ்தலராக இருந்தபடியால் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருந்தார். அந்நிய பாஷைகளில் பேசுவது போன்ற பல அற்புதச் செயல்களை அவர் செய்யக்கூடியவராக இருந்தார். ஆனால், அற்புதமாக தீர்க்கதரிசனம் சொல்வதும், அந்நிய பாஷைகள் பேசுவதும், அறிவும், ஒழிந்து போகுமென்றும், அன்பு ஒருபோதும் ஒழியாது என்றும் அவர் சொன்னார். இதையே வேறுவிதமாகச் சொன்னால், இயற்கை வழியில் காரியங்கள் நடப்பது தொடரும், ஆனால் அற்புத வகையில் நடைபெற்ற காரியங்கள் ஓய்ந்து போகும் என்கிறார்.

பவுல் தொடர்ந்து, நமது அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்க தரிசனம் சொல்லுதலும் குறைவுள்ளது என்கிறார். மீண்டும் அற்புத அறிவைப் பற்றியும் தீர்க்கதரிசனம் உரைத்தலைப் பற்றியும் குறிப்பிடுகிறார். அவை குறைவானது என்றும் சொல்லுகிறார். அதாவது, அவைகள் தற்காலிகமாக, கொஞ்சக் காலத்திற்கு மட்டுமே இருக்கும். எப்படியெனில், ஒரு கட்டிடம் கட்டப்படும் போது பயன்படுத்தப்படும் சாரங்களைப் போல. அன்று சபை சமீபத்தில் தான் ஆரம்பிக்கப்பட்டிருந்தது, அது, அப்பொழுதுதான் வளர்ந்து கொண்டிருந்தது. அதை வழிநடத்த புதிய ஏற்பாடு பூர்த்தி செய்யப் பட்ட நிலையில் இல்லை. எனவே, புதிய ஏற்பாடு எழுதப்பட்ட வடிவில் கொடுக்கப்படும் வரையில், இந்த உதவியைச் செய்ய அற்புதங்களின் ஆதரவு தேவையாக இருந்தது.

பின்னர், பவுல் அறிவிக்கிறார்: **நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்.** குறைவானது என்று அவர் வர்ணிக்கும் அந்தக் காரியங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு

மட்டுமே, அதாவது, பூரணமான விடுதலைச் சட்டம் வரும் வரையில் கொடுக்கப்பட்ட அற்புதச் செயல்களே ஆகும். கிறிஸ்துவின் வருகையைப் பற்றி அவர் இப்படிக் குறிப்பிடுவதாக சிலர் இதற்கு விளக்கம் அளிக்க முயலுவர். ஆனால், அப்படியிருந்தால், அந்தச் சமயத்தில் இந்த எல்லாக் காரியங்களும் ஒழிந்துபோகும் என மிக அழுத்தமாக கூறக் காரணம் என்ன? கிறிஸ்துவின் வருகையைப் பற்றி அவர் பேசிக் கொண்டிருக்கவில்லை. மாறாக, புதிய ஏற்பாடு வருவதையே அவர் குறிப்பிட்டுக் கொண்டிருந்தார். பூரண விடுதலைச் சட்டமாகிய புதிய ஏற்பாடு வரும்போது, இந்த அற்புதக் காரியங்கள் அனைத்தும் இனி தேவைப்படாது என்பதால் அவை ஒரு முடிவுக்கு வரும் என்று தான் அவர் சொல்லிக் கொண்டிருந்தார். யாக்கோபு இதை ஆதரித்துக் கூறும்போது, **சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்** என்றார் [யாக்.1:25]. பின்னர் பவுல் விளக்கிச் சொல்லும்போது , நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப்போல பேசினேன், குழந்தையைப் போல சிந்தித்தேன், குழந்தையைப்போல யோசித்தேன்; நான் புருஷனானபோதோ குழந்தைக் கேற்றவைகளை ஒழித்துவிட்டேன் என்கிறார்.

மீண்டுமாக, இந்தக் கருத்தை அவர் விளக்கிக் கூறுகையில் இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய் பார்ப்போம்; இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன். அப்பொழுது நான் அறிப்பட்டிருக்கிற படியே அறிந்துகொள்ளுவேன் என்கிறார். அந்த அற்புத யுகத்தில் கண்ணாடியில் நிழலாட்டமாகப் பார்க்கிறதைப் போல, அதாவது, ஒருவனுடைய முகத்தை மிகவும் தெளிவாகக் காண முடியாதது போல, பார்க்கிறோம் என அவர் கூறுகிறார். ஆனால், காலம் வரும்போது புதிய ஏற்பாட்டின் வழியாக நான் அறியப் பட்டிருக்கிறபடியே அறிந்து கொள்ளுவேன் என அவர் சொன்னார். யாக்கோபு 1:22-25 வசனங்களில் இதையே தான் யாக்கோபும் சொல்லுகிறார். அதே சமயத்தில் தான் குறைவாக அறிந்து கொண்டதாக, காலம் வரும்போது சகலரும் தேவனுடைய விருப்பத்தை முழுவதுமாக அறிந்து கொள்ளுவார்கள் என்றும் பின்னர் அவர் கூறினார்.

எனது நண்பர்களே! புதிய ஏற்பாட்டின் வருகையோடு அற்புத யுகமும் முடிவுற்றது. தமது கட்டளையைத் தேவன் முற்றிலுமாக வெளிப்படுத்தியிருக்கிறார். ஒருவன் தேவனுடைய

கட்டளையை அறிய விரும்பினால் புதிய ஏற்பாட்டுக்குச் செல்ல வேண்டும். அவருடைய கட்டளைகளை விடுத்துத் தனியாக இன்று யாரிடமும் தேவன் பேசிக் கொண்டிருக்கவில்லை. உதாரணமாக, அற்புதங்களைத் தாங்கள் செய்வதாக இன்று கூறிக்கொள்ளும் நபர்கள், இரட்சிக்கப்பட விரும்புகிற அனைவரும் முன்னே வந்து நிற்கவேண்டுமென்றும், பாவிகளுக்கான ஜெபத்தை அவர்களோடு சேர்ந்து திருப்பிச் சொல்ல வேண்டுமென்றும் அழைப்புவல் விடுகின்றனர். தேவன் அவர்கள் வழியாகக் கிரியை செய்வதாக கூற இவர்களுக்கு எவ்வளவு தைரியம் வேண்டும்? பேதுருவோ, பவுலோ அல்லது வேறு ஒரு நற்செய்திப் போதகரோ, அவர்களுக்குச் செவிசாய்த்துக் கொண்டிருப்பவர்களை முன்னே வரச்சொல்லி, அவர்கள் இரட்சிப்படைய வேண்டுமானால் பாவிகளின் ஜெபத்தை அவர்களோடு சேர்ந்து ஜெபிக்க வேண்டும் எனக் கூறியதாக வசனங்களில் நீங்கள் எங்கேயாவது பார்க்க முடிகிறதா? கிறிஸ்தவன் அல்லாதவர்களுக்காக அப்படிப்பட்ட ஒரு ஜெபம் தேவனுடைய வார்த்தையில் இல்லவே இல்லை.

ஏமாந்து போகாதீர்கள் என உங்களை மீண்டும் கேட்டுக் கொள்ளுகிறேன். தேவனை விசுவாசியுங்கள், கிறிஸ்துவை விசுவாசியுங்கள், புதிய ஏற்பாட்டில் காணப்படும் பரிசுத்த ஆவியின் வார்த்தைகளை விசுவாசியுங்கள். நீங்கள் என்ன செய்ய வேண்டும் என அவர்கள் சொல்லுகிறார்களோ அவற்றைச் செய்யுங்கள். அதாவது, உங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்படுங்கள். கிறிஸ்துவில் உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுங்கள். உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட திருமுழுக்குப் பெறுங்கள், கர்த்தர் உங்களை இரட்சிப்பார், பரிசுத்த ஆவியானவரைத் தருவார், அவருடைய சபையில் சேர்த்துக் கொள்ளுவார். நீங்கள் இரட்சிப்படைய வேண்டுமானால், அதைத்தானே உங்களையும் மற்ற எல்லாரையும் அவர் செய்யச் சொல்லுகிறார்.

பரிசுத்த ஆவியானவரின் பணி என்ற இந்த பாடங்கள் அனைத்தையும் என்னோடு படித்து, கற்றுக்கொண்டதற்காக உங்களுக்கு நன்றி. அவருடைய வசனத்தின் வழியாகவும் அதற்கு ஏற்றபடியும் மட்டுமே இன்று ஆவியானவர் கிரியை செய்கிறார். அற்புதமான வழியில் இன்று பரிசுத்த ஆவியானவர் மனிதரிடத்தில் கிரியை செய்யாவிட்டால், தேவனுடைய கட்டளைகளைத் தெரியப்படுத்தவும், பாவத்திலிருந்து மனிதனை இரட்சிக்கவல்ல கிறிஸ்துவை வெளிப்படுத்தவும் வசனத்தின் வழியாக அவர் கிரியை செய்கிறார். ★

பெண்கள் பகுதி

# வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை

Sis. ரேச்சல் இராஜநாயகம்

இன்றைய காலத்திற்கும் இன்றைய நடைமுறைக்கும் ஏற்ற சரியான ஆலோசனையை ஞானி சாலமோன் வெகு காலத்திற்கு முன்பே மிகத் துல்லியமாக எழுதி வைத்துள்ளான். **நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை; தீங்கு நாட்கள் வாராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும்** என்று பிரசங்கியில் [பிரசங்கி 12:1] பார்க்கிறோம். இளம் உள்ளங்கள் தங்கள் வாழ்க்கையில் பெரிய போராட்டங்களைச் சந்தித்துக் கொண்டுள்ளனர். அநேக இரைச்சல்கள் அவர்கள் மனதின் கவனத்தை திசைமாற்றிக் கொண்டிருக்கின்றன. பலவிதமான சக்திகள் அவர்களைத் துன்மார்க்கமான உலகத்திற்குள் அமிழ்த்துக் கொண்டுள்ளது. புத்தியுள்ள வாலிபர்களோ வேதத்திற்குத் தங்கள் செவியைச் சாய்க்கின்றார்கள். புத்திகெட்ட இளம் மக்களோ விலை மதிக்க முடியாத பொக்கிஷம் என்னும் வேத அறிவுரையைக் கேட்க மனதில்லாமல் மிக வேகமாக அழிவுக்குச் செல்லும் பாதையில் பயணம் செய்து கொண்டு ள்ளனர். ஞானியின் காலத்திற்குச் சென்று அவர் அறிவுரைக்குச் செவி கொடுப்பது இன்றைய இளம் பருவத்தினருக்கு எவ்வளவு அத்தியாவசியமானதன்றோ!

*முதலாவது* ஏன் வாலிப பிராயத்திலே சிருஷ்டிகரை நினைக்க வேண்டும்? பிரசங்கி 12:1-ல் கூறப்பட்ட **வாலிப பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை** என்பது ஒரு கட்டளையாகும். இது ஆவியனவராலே வெளிப்படுத்தப்பட்ட ஒன்று. இதை புறக்கணிப்பதென்பது பிதாவாகிய தேவனின் கட்டளைகளில் ஒன்றைப் புறக்கணிப்பதற்குச் சமம். எப்படி தேவன் நோவாவிடம் ஒரு பேழையைக் **கட்டு** என்று சொன்னாரோ, ஆபிரகாமை ஊர் என்கிற கல்தேயர் நாட்டிலிருந்து **வா** என்று அழைத்தாரோ, யோனாவை நினிவேக்குப் போய் **பிரசங்கி** என்று கூறினாரோ அதே போன்று **உன் சிருஷ்டிகரை வாலிபத்திலே நினை** என்பதும் ஒரு கட்டளையே. வேதத்திலுள்ள சில கட்டளைகள் வாழ்க்கையில் எல்லா கால கட்டங்களுக்கும் பொருந்துகிறதாக உள்ளது. ஆனால் சில கட்டளைகள் அப்படியல்ல. எபேசியர் 6:4-ல் உள்ள ஆலோசனை ஒருவர் பெற்றோராக மாறும் வரை அதற்குக் கீழ்ப்படிய முடியாது. எபேசியர் 6:4 ல் உள்ள கட்டளை ஒரு பையனுக்கோ, அல்லது திருமணமே ஆகாத ஒருவருக்கோ பொருந்தாது. ஆனால், பிரசங்கி 12:1-ல் உள்ள ஆலாசனை பிரத்தியட்சமாக வாலிபர்களுக்கு மட்டும் தான் பொருத்தமாக கூறப்பட்டுள்ளது. அவை களை அவன் தன் அந்திய காலத்தில் கடைபிடிக்க முடியாது.

***இரண்டாவதாக:*** வாலிப பிராயத்திலே சிருஷ்டிகரை ஏன் நினைக்க வேண்டும்? ஏனென்றால் இதுவே ஒருவருடைய வாழ்க்கையில் நல்ல நாட்களாகும். சங்கீதக்காரன் கூறும்போது மனுஷனுடைய நாட்கள் எழுபது வருஷம் பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷம் (சங்.90:10) என்கிறான். வயதானவர்கள் மரிக்கிறார்கள், வாலிபர்களும் மரிக்கிறார்கள். அதிலே சற்றும் எதிர்பாராத வகையில் விபத்துக்களில் சிக்கி வாலிபர்கள் மரிப்பதை நாம் பார்க்கிறோம். எபிரெய ஆசிரியர் அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது (எபிரெயர் 9:27) என்றும், யாக்கோபு ஆசிரியர் நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே, உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக் காலந்தோன்றி பின் தோன்றா மலிருக்கிற புகையைப் போன்றே உள்ளது. தேவனை தேடுவதற்குக் சரியான தருணம் வாலிபப் பிராயமே தவிர வேறு தருணம் இல்லை. வயதான பின்பு நினைத்துக் கொள்வேன் என்று நீ திட்டமிட்டால் அது எவ்வளவு பரிதாபமான நிலை தெரியுமா?

***மூன்றாவதாக:*** வாலிபப் பிராயத்திலே நீ அவரை நினைக்க வேண்டும்? ஏனென்றால் உன்னுடைய நம்பிக்கைக்கு அவர் பாத்திரமானவர். சுயநலமுள்ள சாத்தான் வாலிபர்களை அழிவுக்கு கொண்டு செல்வதில் மிகவும் நாட்டமுள்ளவனாக இருக்கிறான். அவர்களின் சரீரம், ஆவி, ஆத்துமா இப்படி எல்லாவற்றையும் நாசப்படுத்துகிறான். தற்காலிகமாக இன்பத்தைக் காட்ட தந்திரமாக அவர்களை நிரந்தர சோதனைக்கு அனுப்புகிறான். தேவன் வாலிபர்களைச் சிருஷ்டித்து, பரத்திலிருந்து எல்லா நன்மைகளையும், கிருபைகளையும் ஏராளமாய் பொழிந்து கொண்டிருக்கிறார். தேவனும் அவருடைய குமாரனுமாகிய இயேசு கிறிஸ்துவும் இந்த இளம் உள்ளங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்று ஆவலாய் உள்ளனர். எனவே, வாலிபர்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள தேவன் பாத்திரமுள்ளவராயிருக்கிறார்.

***நான்காவது ,*** நீ ஏன் வாலிப பிராயத்திலே உன் தேவனை நினைக்க வேண்டுமென்றால், இயேசு கிறிஸ்து உண்மை யாலுமே உன் வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிறாரா என்பதை உன் நண்பர்கள் கவனிக்கிறார்கள். அவர்கள் விசுவாசிக்கிற வேத வசனங்கள் ஒருவேளை நீயாக இருக்கலாம். அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதினபோது எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள் தானே (2 கொரிந்தியர் 3:2) என்கிறார். நம்மைச் சுற்றிலும் இருக்கின்ற மக்கள் நம்முடைய வாழ்க்கை முறைகளை நன்கு கவனித்துப் பார்த்துக் கொண்டுள்ளனர்.

நம் வாழ்க்கையின் மூலம் விசேஷமானது எப்படி மற்றவர்களால் பார்க்கப்படும்? பிறர் நம் வாழ்க்கையை கூர்ந்து கவனித்தால் நாம் எப்படி வாழ வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் பவுல் அடிகளார் இளைஞர்களாகிய தீமோத்தேயு வுக்கும், தீத்துவுக்கும் எழுதும்போது, உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை

அசட்டை பண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும் நடத்தையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு (1தீமோ. 4:12) என்கிறார். ஆத்தும ஆதாயப் பணியில் முதியோரைக் காட்டிலும் வாலிபர்கள் அதிக உற்சாகத்தோடு அதிக எண்ணிக்கையில் சாதனை படைக்க முடியும்.

***ஐந்தாவது:*** பிதாவாகிய தேவன் வாலிபர்களால் நினைக்கப்பட வேண்டும். ஏனென்றால் உனக்கும் கூட ராஜ்ஜியத்தின் பொறுப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவருடைய ராஜ்ஜியமாகிய சபையில் நீயும் அங்கமாக இருந்து செயல்பட வேண்டுமென்று ஒவ்வொரு வாலிபரிடமும் அவர் எதிர்பார்க்கிறார். தேவனுடைய பிரதான கட்டளை (மத். 28:18-20: மாற்கு 16:15-16: லூக்கா 24:46-49) வாலிபர்களுக்குப் பொருத்தமானவைகளாக உள்ளன. விழுந்து கொண்டிருக்கிற சமுதாயத்தைப் பாதுகாத்து எடுத்து நிறுத்த இன்றைய கிறிஸ்தவ வாலிபர்களின் உதவிக்கரம் தேவையாய் உள்ளது. வாலிபர்களின் தூய்மையான, நல்ல பக்தியான வாழ்க்கையானது மற்றவர்களும் இயேசுவண்டை ஓடிவர ஒரு நல்ல தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

***ஏன் சிலர் வாலிபத்திலே சிருஷ்டிகரை நினைப்பதில்லை?***

பிள்ளைகள் தேவனுடைய வார்த்தையைப் பற்றி கற்றுக் கொள்வது மிக மிக அவசியமான ஒன்று . சில குடும்பங்களில் பார்த்தால் பிள்ளைகள் குறிப்பாக வாலிபர்கள் சுத்தமாகவே தேவனற்ற குடும்பச் சூழலில் வளர்க்கப்படுகிறார்கள். அவர் களுடைய பெற்றோர்கள் ஒழுங்காக சபைக்கு செல்லாதவர் களாக இருக்கிறார்கள். தன்னுடைய தந்தை வேதத்தைப் படிப்பதையோ, தாய் தங்களுக்கு வேதாகமக் கதைகளைக் கற்றுக் கொடுத்ததையோ அவர்கள் ஒருபோதும் கேட்டதேயில்லை. இப்படிப்பட்ட இளைஞர்கள் ஏனோக்கைப் போன்ற தகப்பனைப் பெறவில்லை. ஏனோக்கு தன் வாழ்வில் தேவனோடு சஞ்சரித்தான் (ஆதி.5:21 -24) என்று பார்க்கிறோம். துரதிஷ்டவசமாக இவர்கள் ஆபிரகாமைப் போன்ற தகப்பனைப் பெறவில்லை. ஆபிரகாம் தன் பிள்ளைகளுக்குத் தேவனின் வழியைக் காத்து நடக்கும்படியாகக் கட்டளையிட்டான் (ஆதி. 18:19) தேவனைப் பின்பற்றும்படியாக உறுதியாக நின்ற யோசுவாவைப் போன்ற குடும்பத் தலைவனை (யோசுவா 24:15) இவர்கள் பெறவில்லை. நீதியைச் செய்யத் தூண்டின யோசபாத், அன்னாள், எலிசபெத், மரியாள், லோவிசாள் ஐனிக்கேயாள் போன்ற தாய்மார்கள் இவர்களுக்கு இல்லை.

பழைய ஏற்பாட்டிலே வாலிபனான யோசேப்புக்கு சோதனை வந்தபோது அவன் என்ன செய்தான்? (ஆதியாகமம் 39) நல்மன சாட்சியுள்ளவனாக **இல்லை** என்று திட்டமும், தெளிவுமாக கூறி விட்டான். அந்த இல்லை என்ற சப்தம் அநேக நூற்றாண்டுகள் வரை தொனித்துக் கொண்டேயுள்ளது. ஒருவேளை அந்தச் சூழ்நிலைக்கு அவன் ஆம் என்று சொல்லியிருப்பானானால் மகா புத்திசாலியான யோசேப்பை நாம் என்றோ மறந்திருப்போம். இளம் உள்ளங்களை சாத்தான் வேண்டாம், பொறுத்திரு என்கிறான். பிதாவாகிய தேவன் இன்றைக்கே இரட்சண்ய நாள் என்கிறார். யாருக்குச் செவி கொடுக்கப் போகிறாய்? இதுதான் உன்னுடைய நித்தியத்தை நிச்சயிக்கும்.

## எவ்வாறு வாலிபத்திலே தேவனை நினைக்க முடியும்?

இளமையிலே வேதத்தைப் படிப்பதன் மூலம், அவன் முதுமை அடையும் போதும் அவனுக்கு அது ஞானமாக விளங்கும். தீமோத்தேயுவை நினைத்துப் பாருங்கள். சிறு வயது முதல் வேத எழுத்துக்களை அறிந்தவன் என்று 2தீமோத்தேயு 3:15 ல் பார்க்கிறோம்.

நன்மை, தீமை அறியத்தக்க வயது வந்தவுடன் கிறிஸ்துவுக்கு தங்களை கீழ்ப்படுத்துவதின் மூலம் வாலிபப் பிராயத்திலே தேவனை நினைத்து வாழ முடியும். நல்ல முன் மாதிரியான ஜீவியத்தின் மூலம் வாலிபத்தினாலே ஒருவன் தேவனுக்குப் பிரியமாய் இருக்க முடியும். தீமோத்தேயுவைப் பற்றி கூறும்போது அவன் லீஸ்திராவிலும் இக்கோனியாவிலுமுள்ள சகோதரராலே நற்சாட்சி பெற்றவனாயிருந்தான் [அப்.16:2]. நாம் யார் என்று சொல்லுகிறது எவ்வளவு முக்கியமோ, அதைவிட நம்மை யார் என்று பிறர் சொல்வதுதான் மிக முக்கியம்.

இதை வாசிக்கும் அருமை வாலிப உள்ளங்களே! தினமும் வாசித்து, ஜெபிப்பதை பழக்கமாக மாற்றிக் கொள்ளுங்கள். சபையில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் தவறாமல் கலந்து கொள்ளுங்கள். நீ சார்ந்திருக்கும் உண்மையான சபையின் மீது பெருமிதம் கொள்ளுங்கள். ஆத்தும ஆதாய வீரர்களாக மாறுங்கள். ஒருவேளை உன் வீட்டினர் இன்னும் கிறிஸ்துவை அறியாதவர்களாக இருக்கலாம். ஆனால், நீங்கள் அந்திரேயாவாக இருந்து அவர்களை இயேசுவண்டை அழைத்து வாருங்கள் [யோவான்1:40-42]. தூய்மையான வாழ்க்கைக்கு யோசேப்பைப் பாருங்கள் [ஆதி.39] தைரியமாக இருக்க இளைஞன் தாவீதிடம் செல்லுங்கள் [1 சாமு.17] இளமைத் துடிப்பும், ஒப்புக்கொடுத்த ஜீவியத்திற்கும் யோசியாவைப் பாருங்கள்[2 நாளாகமம் 34] எந்த சூழலிலும் தன் நம்பிக்கையைத் தேவன் மேல் வைத்த வாலிபர்களில் தானியேலைப் போல் வேறொருவர் இல்லை [தானி1:8]. தன் நல்ல நடத்தையின் மூலம் பிறருக்குச் சாட்சியாக இருந்ததற்கு தலை சிறந்த எடுத்துக்காட்டு தீமோத்தேயு. எல்லாவற்றைக் காட்டிலும் மாபெரும் உண்மையான நன்மாதிரி நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே. வேதாகமம் அநேக நன்மாதிரிகளை உங்கள் முன் வைத்துள்ளது அதன் அடிச்சுவடுகளைப் பின்பற்றிவாழுங்கள் [1 பேதுரு 2:21].

வாலிபத்திலே இயேசு கிறிஸ்துவையும் வசனங்களையும் சமுதாயத்திற்கு உயர்த்திக் காட்டுங்கள். அப்போது பிதாவாகிய தேவன் உங்களை உயர்த்திக் காட்டுவார்.

### உறவுக்கு அவசியமானவைகள்

புன்னகைப் புரியுங்கள், புன்னகை ஒரு சர்வதேச மொழி அதை நாம் பயன்படுத்துவோம்

ஒருவரைப் பெயர் சொல்லி அழைக்க வேண்டும் ஒருவரின் காதுக்கு இனிமையான ஓசை அவருடையபெயரைக் கேட்பதுதான்.

நட்பாக இருந்து எல்லோருக்கும் உதவ வேண்டும், அதிக நண்பர்களை பெற்றுக் கொள்ள ஒரே வழி எல்லோரிடமும் நட்பாயிருப்பதுதான்.

வாலிபர் பகுதி

# தீமையை வெறுப்பதே...

(நீதி. 8:13)

Dr. ஏபில் நாயகம்

உன்னதமான தேவனுடைய நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள். நீதி 8:13 ல் **தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்** என்று வாசிக்கிறோம். வாலிபப் பருவத்தில், இருக்கும் எத்தனைபேர் தீமையை வெறுத்து கர்த்தருக்குப் பயப்படுகிறோம்? கர்த்தருக்குப் பயப்படும் பயம் நமக்கு உண்டு என்று நம்மை நாமே திருப்திபடுத்திக் கொள்கிறோம். ஆனால், தீமையை நம்மில் எத்தனை பேர் வெறுத்துத் தள்ளியிருக்கிறோம்? பிரியமான வாலிபர்களே! சிந்திக்கும் காலம் இது.

சரி. தீமையைக் குறித்து சில காரியங்களைக் கவனித்து வேதத்தின் துணையோடு அதை எப்படி மேற்கொள்வது என்று தியானிப்போம். எந்த ஒரு காரியம் நம்மை தேவனிடம் இருந்து விலகச் செய்கிறதோ அதுவே தீமையான காரியம். தீமையின் விளைவு பாவம். தேவனுடைய அங்கீகாரம் தீமையான காரியங்கள் மீது இருக்காது. நம் தேவன் தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக் கண்ணன் என்று வாசிக்கிறோமே [ஆபகூக் 1:13].

தீமையான காரியங்களுக்கு விலக வேண்டுமானால், தீமையான காரியங்கள் தோன்றுகிற இடத்தை பற்றிய அறிவு நமக்கு வேண்டும். மத் 15:19 ல் **இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டு வரும்** என்று வாசிக்கிறோம். எரே. 17:9 ல் **இருதயமே மகா கேடுள்ளது...** என்று பார்க்க முடியும். அப்படியானால் நம்முடைய இருதயமே தீமையான எண்ணத்திற்கும் தீமையான செயல்களுக்கும் முக்கியமான காரணமாயிருக்கிறது. மேலும், உலகத்தின் காரியங்களாலே மாம்ச இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையும் உண்டாயிருக்கிறது [1யோவான் 2:15-16]. ஆக, **நம்முள்** இருக்கிற இருதயமும், நமக்கு வெளியே நாம் வாழும் **உலகமுமே** தீமையான காரியங்களின் மூல காரணங்களாக இருக்கிறது.

அப்படியானால், தீமையை எப்படி வெல்வது? தேவனுக்குப் பிரியமாக எப்படி வாழ்வது? வேத வசனங்களின் அறிவுரையைக் கவனிப்போம். ஏனென்றால், அதன் மூலமாக மட்டுமே நம் வழிகளை நாம் சுத்தம் செய்ய முடியும் [சங். 119:9].

I சங்கீதம் 1:1 ல் **துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்** என்பது நம் **அநேகருக்குத் தெரிந்த மனப்பாட வசனம்தான்.** நம் பெற்றோர்கள் அதை நமக்குச் சிறு வயதிலிருந்தே சொல்லி வளர்த்திருக்கிறார்கள். நாமோ அதின் அர்த்தத்தை இன்றளவும் புரிந்து கொள்ளாமல் இருக்கிறோம். யார் துன்மார்க்கர்? பாவம் செய்ய நாடுபவர்கள் துன்மார்க்கர். வாலிபர்களே, பல சமயங்களில் நாம் வழி விலகிப் போவதற்கான ஒரு பிரதான காரணம் **நம் நண்பர்கள்.** நிச்சயமாக நண்பர்கள் நமக்குத் தேவை. ஆனால், எப்படிப்பட்ட நண்பர்கள்ள நாம் நம்மோடு சேர்த்துக் கொண்டிருக்கிறோம்? பெரும்பாலும் பாவம் செய்ய நமக்கு துணைபோவதும், நம்மை இப்படி பாவம் செய்யும்படி ஊக்குவிப்பதும் நண்பர்கள் தான். எனவே, நல்ல நண்பர்களை உங்களுக்காக நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள், **ஆகாத சம்பாஷணை நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்** [1கொரி.15:33]. எனவே, சங். 1:1-ல் வாசிப்பது போல கெட்ட நண்பர்களின் வழியில் நில்லாமல், அவர்களின் ஆலோசனையில் நடவாமல், அவர்களோடே உட்காராமல் இருப்பதே தீமையை வெறுக்க நமக்கு உதவும்.

II ரோமர் 12:1-2 ல் **நாம் இந்த பிரபஞ்சத்துக்கு ஏற்றவாறு வேஷம் போடாமல் இருக்க வேண்டும்.** பல தருணங்களில் நாம் யார் என்பதை நாம் மறந்து விட்டு, உலகத்தாரைப் போல வாழ வேண்டும் என்ற ஆசையேடு இருக்கிறோம். பல நேரங்களில் அந்த ஆசையை நிறைவேற்றியிருக்கிறோம். இது தவறான ஒரு போக்காகும். நம்முடைய நடவடிக்கைகளிலே நாம் உலகத்தினால் உண்டானவன் அல்ல என்பதை பிரதிபலித்துக் கொண்டே இருக்க வேண்டும். ஏனென்றால், நாம் தேவனால் உண்டானவர்கள்.

I தீமோ. 6:9-11 மற்றும் II தீமோ. 2:16-22, ல் பண ஆசை, சீர்கேடான வீண் பேச்சு, பாலியத்துக்குரிய இச்சை, ஆகிய இவைகளுக்கு விலகி **ஓடு** என்று பவுல் தீமோத்தேயுவுக்கு அறிவுரையாகக் கொடுத்துள்ளார். நன்றாகக் கவனியுங்கள். விலகி ஓடவேண்டும். Iதெச. 5:22 **பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்** இரண்டு வார்த்தைகளை இங்கே கவனியுங்கள்.

**தோன்றுகிற** மற்றும் **எல்லாவற்றையும்** அப்படியென்றால், பொல்லாங்கை விட்டு விலகினால் மட்டும் போதாது. மாறாக, ஒரு செயல் தீமையை விளைவிக்கும் என்று நினைத்தாலே அந்த செயலை விட்டு ஓடவேண்டும். அது மட்டுமல்லாமல், தீமையை விளைவிக்கும் எல்லாக் காரியங்களையும் விட்டு விலகி ஓட வேண்டும். ஏதோ சில காரியங்களை விட்டு விலகினால் மட்டும் போதாது.

இன்றைய காலகட்டத்தில் வாழும் இளைஞர்களுக்கு இது ஒரு சவாலான காரியம் தான். ஆனால், இது செய்ய முடியாத ஒரு காரியமல்ல. சரீர இச்சைக்கு விலகி ஓடின யோசேப்பு இதை நிறைவேற்றியிருக்கிறார். தானியேல் தன்னை தீட்டுபத்தாமல் இருக்க முடிந்தது. யோபுவாலே தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகியிருக்க முடிந்தது. அவர்களோடு இருந்த அதே தேவன் நம்மோடும் உண்டு. ஆகவே,நம்மால் முடியும். தீமையான காரியங்களை வெறுத்து, இச்சைகளுக்கு விலகி ஓட நம்மால் முடியும். பிலி:4:13 ஐ நினைவில் கொள்ளுங்கள்.

சென்ற மாதங்களிலே நாம் கற்றுக் கொண்டபடி மாமிசத்துக்கு விரோதமாக ஆவியும், ஆவிக்கு விரோதமாக மாமிசமும் போரிட்டுக் கொண்டேதான் இருக்கும். அது ஒன்றும் புதிதல்ல. இன்னும் சொல்லப்போனால் அதற்காகவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இந்த உண்மையைப் புரிந்து கொள்ளுங்கள். **விசுவாசத்தில் நல்ல போராட்டத்தைப் போராடு..... இதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்** [Iதீமோ. 6:12]. IIதீமோ. 2:3 – ல்... **நல்ல போர்ச்சேவகனாய் தீங்கநுபவி** என்று தீமோத்தேயுவுக்கு அறிவுரை பவுலால் வழங்கப்பட்டுள்ளது. எனவே போராட்டமான வாழ்க்கைதான் கிறிஸ்தவ வாழ்க்கை. அதிலும் விசேஷமாக வாலிபப் பருவம் இன்னும் சற்றுக் கடினமான ஒரு போர்க்களம். ஆனால், வாலிபர்களே உலகத்தில் இருப்பவனிலும் நம்மில் உள்ளவர் பெரியவர் [1யோவான் 4:4]. அதை மறவாதீர்கள்.

எனவே, நாம் தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்ல எல்லா முயற்சிகளையும் எடுப்போம்.

**பாவம் என்பது என்ன?**

நியாயப் பிரமாணத்தை மீறுவது பாவம் (1யோவான் 3:4)

பொல்லாத சிந்தனைகள் பாவம் (1யோவான் 3:15)

தீய வார்த்தைகள் பேசுவது பாவம் (மத்தேயு 5:35-37; யாக்கோபு 3:5-8)

தவறான கிரியைகள் செய்வது பாவம் (கலாத்தியர் 5:19-21)

நன்மை செய்ய அறிந்தும் செய்யாமலிருப்பதும் பாவம் (யாக்கோபு 4:17)

சிறுவர் பகுதி

# தானியேல்

Dr. பிரெய்ஸி

**ஹா**ய் குட்டீஸ்? எப்படி இருக்கீங்க..?

இந்தக் கோடை கால விடுமுறையில், உங்கள் தாலந்துகளை விருத்தியாக்க ஆரம்பித்திருப்பீர்கள் என நம்புகிறேன்.

இந்த கோடை காலத்துச் சூடு மிகவும் அதிகமாக இருக்கிற படியால், எவ்வளவு தண்ணீர் பருக முடியுமோ அவ்வளவு தண்ணீர் பருகுங்கள்.

இம்மாதம், தினமும் மூன்றுவேளை ஜெபித்த தானியேல் குறித்துப் பார்க்கப் போகிறோம். அதற்கு முன்பாக தானியேல் புத்தகத்தை வாசியுங்கள். தேவனுடைய பார்வைக்குப் பிரியமானவைகளைச் செய்ததால், தேவன் தானியேலை மிகவும் ஆசீர்வதித்தார். தேவனைத் தானியேல் எதற்கும் சந்தேகப்படாமல் முழுமையாக நம்பினபடியால் சிங்கக்கெபியில் போடப்பட்ட போது, தேவன் கர்ச்சிக்கும் சிங்கங்களின் வாயைக் கட்டிப்போட்டார். தானியேலுக்கு ஒரு சேதமும் ஏற்படவில்லை. ஆம், நாமும் கூட நம் வாழ்வில் எவ்வித சந்தேகமும் இல்லாமல் தேவனை விசுவாசித்தால் தேவன் நமக்காகவும் இவ்விதம் செயப்படுவார். நாம் தேவனை நம்ப வேண்டும். தேவனில் முழு நம்பிக்கை வைக்க வேண்டும். தேவன் நிச்சயம் நமக்கு வெற்றி தந்து நம்மைப் பாதுகாப்பார்.

தானியேல் அந்நிய மண்ணில் வாழ்ந்த போதும் தொடர்ந்து தேவனில் நம்பிக்கை வைத்து அவருக்காக வாழ்ந்தான், தன் தேவனை அவன் மறக்கவே இல்லை. ராஜாவைத் தவிர வேறு தேவனை வணங்கக் கூடாது என்ற கட்டளை பிறந்த நிலையிலும் அவன் உறுதி காட்டினான். தன் தேவனை வணங்க அவன் பயப்படவில்லை. அவன் சிங்கங்களின் கெபியில் இருந்து காப்பாற்றப்பட்ட போது, ராஜாவும், தேசத்துக் குடிகளும் தானியேலின் தேவன் வல்லமையுடையவர் என்று அறிந்து கொண்டார்கள்.

ஆகையால், சிறு பிள்ளைகளாகிய நாம் ஒவ்வொருவரும் தைரியமுடையவர்களாயிருந்து, நம் அன்றாடச் செயல்பாடுகளில் உண்மையாயிருந்து, நம் தேவனுடைய வல்லமையைப் பிறர் காணும்படி முன் மாதிரியாயிருக்க வேண்டும்.

அன்புப் பெற்றோர்களே! தானியேல் சம்பவத்தை உங்கள் பிள்ளைகளுக்குக் கவனமாகச் சொல்லிக் கொடுங்கள். அதன் மூலம் ஜெபம், தேவனுக்கு எப்போதும் உண்மையாயிருத்தல், எச்சூழலிலும் தேவனைச் சந்தேகப்படாமலிருத்தல் போன்றவை பற்றி அறிந்துகொள்ள முடியும். நீதிமொழிகள் 3:5-ல் சொல்லப்பட்டிருப்பது போல் , உன் சுய புத்தியின் மேல் சாயாமல் உன் முழு இதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிரு.

**அன்புடன், உங்கள் பிரெய்ஸி அக்கா.**

## சிறுவர்களுக்கான வேத வினா ( படிக்க தானியேல் 6 )

★ தானியேல் 6-ம் அதிகாரத்திலுள்ள ராஜாவின் பெயர் என்ன?

★ தானியேல் எத்தனை பிரதானிகளில் ஒருவனாயிருந்தான்?

★ தானியேல் ஒரு நாளைக்கு எத்தனை முறை ஜெபித்தார்?

★ தானியேலிடம் கடைசியில் என்ன குற்றம் கண்டுபிடித்தார்கள்?

★ எத்தனை நாட்களுக்கு தானியேல் சிங்கக் கொபியில் போடப்பட்டான்?

★ தானியேல் கொபியில் இருந்த போது சிங்கங்களுக்கு என்ன நேர்ந்தது?

★ தானியேல் உயிரோடு வெளியே வந்த போது, யார் சிங்கக் கொபியில் போடப்பட்டது?

★ தானியேல் உயிரோடு வந்தபிறகு ராஜாவால் என்ன கட்டளை பிறப்பிக்கப்பட்டது?

★ தானியேல் எந்த இடத்தைச் சேர்ந்தவன்?

★ தானியேலிடமிருந்து நீ என்ன பாடம் கற்றுக் கொண்டாய்?

**சரியான பதில் எழுதியவர்களில் சிலர்**

| | | |
|---|---|---|
| பெனிட்டா பென்னி | – | காங்கயம் |
| ஜெவன்லின் | – | திருப்பத்தூர் |
| கிங்ஸ்லி | – | காங்கயம் |
| ஜெயஸ்ரீ | – | சென்னை |
| ஜெப பிரியா | – | சென்னை |

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு... *Sis.* **லாவின் பென்னி**

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை 'ஜூன்' மாத இதழில்)**

**சாமுவேல் புத்தகத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள்**
**10-24 அதிகாரங்கள்**

1. தாவீது எந்தப்பட்டணத்தை முற்றிகை போட ஆட்களை அனுப்பினான்?
2. உரியாவின் மனைவியின் பெயர் என்ன?
3. கர்த்தர் தாவீதின் பாவத்தை அவனுக்கு எந்த தீர்க்க தரிசியைக் கொண்டு உணர்த்தினார்?
4. அப்சலோமின் சகோதரியின் பெயர் என்ன?
5. அப்சலோம் எங்கே பொருந்தனையை நிலைவேற்றுவதற்கு எங்கே போக வேண்டும்?
6. பதினேழாம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள இரண்டு ஆசாரியர்களின் பெயர்கள் என்ன?
7. தாவீதுக்கும் அவனோடிருந்தவர்களுக்கும் எவைகளை ஆதாரமாகக் கொண்டு வந்தார்கள்?
8. சவுலின் வீட்டு வேலைக்காரனுடைய பெயர் என்ன?
9. தாவீதின் நாட்களில் எத்தனை வருஷம் பஞ்சம் உண்டாயிருந்தது?
10. யாரோடு வேறொரு யுத்தம் கோபிலே உண்டானது?

## ஏப்ரல் மாத வினாக்களுக்கான விடைகள்

1. அமலேக்கியரை (1:1)
2. யோனத்தான் (1:4)
3. யாபேசின் மனுசரிடத்தில் (2:5)
4. நேரின் குமாரன் (2:8)
5. எப்ரோனியே ராஜாவினிடத்தில் (5:3)
6. ஊசா (6:7)
7. ஓபேத் ஏதோமும், அவன் வீட்டாரும்(6:11)
8. ஆதாதேசர் (8:3)
9. சீபா (9:2)
10. சீரியர் (10:19)

## சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

| | | |
|---|---|---|
| G. சாமுவேல் மோகன்தாஸ் | – | சென்னை |
| N. ஜெபத்தாய் | – | தூத்துக்குடி |
| C. தம்பிராஜ் | – | [illegible] |
| R. சீகன்பால் | – | காரைக்கால் |
| எக்லீசியா | – | காரைக்கால் |
| S. ஜெயராஜ் | – | கோவை |
| K.S. மாணிக்கவாசகம் | – | திருச்சி |
| ஜான் டேனியல் | – | சென்னை |
| சுரேஷ் கபா | – | Kumbli |
| V.S.S. பால்ராஜ் | – | மதுரை |
| Mrs. ஜோஸ்லின் ஜெயலட்சுமி | – | கடலூர் |
| M. செல்வம் | – | கோயமுத்தூர் |
| பாக்கியம் சம்பூர்ணம் | – | ஈரோடு |
| M.D. ரவிச்சந்திரன் | – | சென்னை |
| ப்ளோரா சம்பா | – | திருப்பத்தூர் |
| R. ராகுல் | – | [illegible] |
| ஜெமுனா ரோஸ் | – | திருப்பூர் |
| R. ராஜேந்திரன் | – | சிங்காநல்லூர் |
| S. ஜோதிசுரேஷ் | – | திருச்சி |
| P. ராஜேந்திரன் | – | [illegible] |
| ஜெபேக்காள் | – | மணப்பாறை |
| A. கார்த்திகை | – | திருச்சி |
| N. இந்திரா ஜெயக்கனி | – | தூத்துக்குடி |
| A. ஜெயசீலா | – | காரைக்கால் |
| S. சந்திரகுமாரி | – | நாசரேத் |
| C. அருள்ராஜ் | – | சென்னை |
| ஜோசப்ராஜ் | – | மணப்பாறை |
| மரியாள் | – | மணலி, சென்னை |
| ராமச்சந்திரன் | – | [illegible] |
| இராஜகுமாரி | – | [illegible] |
| லீலா ராணி | – | [illegible] |
| பவானி | – | [illegible] |
| செல்வமணி குணசேகரன் | – | சென்னை |
| செல்வி | – | [illegible] |

# அன்பிலே அதிகமாய் பெருக வேண்டும்

*Benny Martin*

அன்பான திருமறை ஆசான் வாசகர்களுக்கு அன்பின் உறைவிடமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் யாவரையும் இக் கட்டுரையின் வாயிலாக மறுபடியும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். பிரியமானவர்களே! கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் பல இடங்களில் வளர வேண்டியதாய் இருக்கிறது. அதிலும் குறிப்பாக அன்பிலே நாம் வளர்ந்து பெருக வேண்டுமென்று தேவனால் எதிர்பார்க்கப்படுகிறோம். இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களிடையே ஆதியில் இருந்த அன்பு தணிந்து விட்டது. நாம் தேவனிடத்திலும், சக கிறிஸ்தவர்களிடத்திலும் ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டுவிட்டோம். அவசரமான உலகத்தில் பொருள் ஈட்டும் பொருட்டு சக மனிதர்களை ஒரு பொருட்டாக எண்ணாமல் விரும்பியவைகளைப் பெற்றுக் கொண்டோம், ஆனால் அன்பை இழந்துவிட்டோம். பரபரப்பான வாழ்க்கை முறையின் காரணமாக அன்பை காற்றில் பறக்க விட்டு விட்டோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்.

தேவனுடைய பண்புகளிலேயே மிகச் சிறந்தது அன்புதான். அதனால்தான் அவருடைய பிள்ளைகள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்று கட்டளையிடுகிறார். பிலிப்பி பட்டணத்து சபையார் அன்பிலே பெருக வேண்டுமென்பது தன்னுடைய ஜெபமாகயிருந்ததாக அப்போஸ்தலனாகிய பவுல் சொல்கிறார் [பிலிப்பியர் 1:9-11]. தங்களைக் கிறிஸ்தவர் களென்று சொல்லிக்கொள்ளுகிறவர்களில் எத்தனைபேர் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கிற காரியத்தில் பெருகியிருக் கிறார்கள்? நாம் அப்படிப் பெருகியிருந்தால் உலகம் இன்னும் நம்மை சற்று உற்றுப் பார்த்திருக்கும். இது ஆதிக் கிறிஸ்வர்களின் அடையாளமாகவும் அங்கமாகவும் இருந்திருக்கிறது, இதை உலக வரலாற்று ஆசிரியர்கள் கூட வெகுவாக மெச்சியிருக்கிறார்கள்.

### I. *அன்பு செலுத்த முடியாதவர்களிடத்தில் அன்பு கூருதல்*

நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கிற காரியத்தில் முதிர்ச்சி அடைய வேண்டுமென்றால் இதில் கிறிஸ்து எப்படிச்

செயல்பட்டாரோ அதேபோல நாமும் செயல்பட வேண்டும். அவரே நமக்கு மிகச்சிறந்த முன்மாதிரியை வைத்துப் போயிருக்கிறார். **நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்** (ரோமர் 5:8). மனிதனுடைய பாவம் தேவனுடைய பார்வையில் அருவருப்பான ஒன்றாகக் காணப்படுகிறது. இதன் காரணமாக மனிதன் தேவனுடைய அன்பைப் பெற்றுக்கொள்ள தகுதியற்றவனாக மாறிவிட்டான். இருந்தபோதிலும், கிறிஸ்து மனிதனிடத்தில் அன்பு கூர்ந்தது ஆச்சரியத்திலும் ஆச்சரியம். இதை ஒருவர் எண்ணிப் பார்த்தால் கிறிஸ்துவின் அன்பு அந்நபரை மெய் சிலிர்க்கச் செய்துவிடும்.

நாம் கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றுகிறவர்களாயிருந்தால் அன்பு செலுத்த முடியாதவர்களிடத்தில் அன்புகூர கற்றுக்கொள்ள வேண்டும். பலருடைய தீமையான வழிகள் அவர்களிடத்தில் நாம் அன்பு செலுத்த முடியாதபடி செய்து விடுகிறது. ஆனாலும், அவர்களிடத்தில் நாம் அன்பு காட்ட வேண்டும். அப்போஸ்தலனாகிய யோவான் தேவனிடத்தில் அன்பு கூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூர வேண்டும் என்று சொல்கிறார் (1யோவான் 4:21). இதே யோவான் இதற்கு முந்தைய வசனத்தில் தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன் தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான் என்று கேட்கிறார். என் பாவங்கள் திரளாயிருந்தாலும் தேவன் என்னிடத்தில் அன்புகூருகிறாரென்றால், என் சகோதரனோ சகோதரியா அவருக்குத்தக்க காரியங்களைச் செய்தாலும் கூட நிச்சயமாக என்னால் அவர்களிடத்தில் அன்பு கூரமுடியும். இதைக்குறித்து பேதுரு சொல்லும்போது அன்பு திரளான பாவங்களை மூடும் என்று சொல்கிறார் (1பேதுரு 4:8). நாம் மற்றவர்களிடத்தில் அன்பு கூருவதற்கு கிறிஸ்துவின் அன்பு ஓர் அளவுகோலாக இருக்கிறது.

II. *நம் சத்துருக்களிடத்தில் அன்பு கூருதல்*

இது இவ்வுலகில் யாரும் போதிக்காத புதிய போதனை. இது உலகின் மற்ற போதனைகளிலிருந்து வேறுபட்டு தனித்து நிற்கிறது. இது சொல்லுவதற்குக் கடினமான ஒன்றாக இருந்தாலும் கூட, அன்பில் பெருக வேண்டுமென்றால் இதை நாம் செயல்படுத்தியே ஆக வேண்டும். நம் ஆண்டவராகிய இயேசு

கிறிஸ்து தம்மைச் சிலுவையில் அறைந்தவர்களுக்காகக் கூட அதாவது அவர்களுடைய மன்னிப்புக்காக ஜெபித்திருக்கிறார் (லூக்கா 23:34). நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து யோவான்15:13- ல் **ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலும் இல்லை** என்று சொன்னார். சொன்னபடியே அவர் தம்முடைய சத்துருக்களுக்காகத் தம்முடைய ஜீவனைக் கொடுத்தார். இதை விட பெரிதான அன்பு இவ்வுலகில் இருக்க முடியாது. பொதுவாகவே மனித இனம் **உனக்கடுத்தவனைச் சிநேகித்து உன் சத்துருவைப் பகைப்பாயாக** என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறது. ஆனால், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அன்பின் புதிய பரிமாணத்தை அறிமுகப்படுத்தினார். அதாவது, **உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள், உங்களைப் நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள் என்று** போதிக்கிறார் (மத்தேயு 5:43-48). நாம் கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்ற வேண்டுமென்றால் கிறிஸ்து தம்முடைய சத்துருக்களை சிநேகித்தது போல் நாமும் சத்துருக்களைச் சிநேகிக்க வேண்டும்.

மேலும் அன்பைப் பற்றி மிக விவரமாக, விரிவாக உலகில் எந்த இலக்கியத்திலும் இல்லாத அளவுக்கு வேதாகமத்தில் Iகொரிந்தியர் 13 ஆம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. இவ்வுலகில் அன்பைப்பற்றி பலர் கவிதைகளை வடித்திருக்கிறார்கள். தத்துவ ஞானங்களை உதிர்த்திருக் கிறார்கள். ஆனால், அவைகளில் அன்பின் ஆழமும் நீளமும் தெளிவாக தெரிவிக்கப்படவில்லை. I கொரிந்தியர் 13 ஆம் அதிகாரம் தான் அன்பின் மிகச்சிறந்த விளக்கமாயிருக்கிறது. இவ்வதிகாரத்தில் இடம்பெற்றுள்ள அன்பை நாம் பெற்றுக்கொண்டால் நாம் இழந்து போவதற்கு ஒன்றுமே இல்லை.

பிரியமான தேவனுடைய பிள்ளைகளே! நாம் இதுகாறும் அன்பில் அதிகமாகப் பெருகுவதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்று பார்த்தோம். இவைகளை நம் அன்றாட வாழ்வில் நடைமுறைப்படுத்தினால் அன்பெனும் பண்பை நாம் அங்கமாக்கிக் கொள்ளலாம். நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருந்தால் கிறிஸ்துவின் சீடர்கள் என்பதை உலகம் அறிந்து கொள்ளும், நம் பரமப் பிதாவும் மகிமைப்படுவார். ★

# ஓடுங்கள்

*Bro. K. M.* பிலிப் –பவானி

**தே**வனுக்குப் பிரியமானவர்களே! மீண்டும் இத்தலைப்பின் கீழ் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். சென்ற இதழில் தகப்பனின் விருப்பத்தை நிறைவேற்ற சேனைக்குள் ஓடி மகத்தான வெற்றி பெற்ற தாவீது, திருந்தி திரும்பி வந்த இளைய மகனை நோக்கி ஓடி அணைத்துக் கொண்ட தந்தை, இயேசுவைக் காண வாஞ்சையோடு ஓடி குடும்பத்தோடு இரட்சிப்பைப் பெற்றுக் கொண்ட சகேயு, இயேசு உயிர்த்தெழுந்த செய்தியை சீஷர்களுக்கு உடனே அறிவிக்க ஓடிய மகதலேனா மரியாளும், மற்றொரு மரியாளும் இவர்கள் யாவரும் தங்கள் ஓட்டத்தில் காட்டிய தீவிரத்தால் தாங்கள் விரும்பியதைப் பெற்றுக்கொள்ள முடிந்தது என்று பார்த்தோம். அதே சமயம் வாலிப ஐசுவரியவானோ, விரும்பியும், தீவிரம் காட்ட ஓடியும், இயேசுவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிய மனமில்லாததால் நித்தியத்தை இழந்து போனான். இன்றும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் பக்தி வைராக்கியத்தைக் காட்டும் அநேகர் வேதம் கட்டளையிட்டுப் போதிக்கிறவைகளுக்குக் கீழ்ப்படிய மன மற்றவர்களாய் முடிவில் நித்திய ஜீவனை இழந்து விடுவார்களே என்ற ஆதங்கம் நமக்குள் ஏற்படுகிறது. அவர்களுக்காகத் தொடர்ந்து ஜெபிப்போம்

அன்பானவர்களே! நாமும் கூட நித்தியத்தை, ஜீவ கிரீடத்தைப் பெற வேண்டும் என்ற தீர்மானமுள்ளவர்களாய் ஆதித் திருச்சபையாரோடு இந்த மாரத்தான் ஓட்டத்தில் நம்மை இணைத்துக்கொண்டு ஓடிக் கொண்டிருக்கிறோம். ஓட்டம் வெற்றி பெற நாம் எப்படி ஓட வேண்டும்? எப்படி ஓடக்கூடாது? என்பதையும் தேவ ஆலோசனை மூலம் நம்மை தெளிவுபடுத்திக் கொள்வோம். முதலில் நாம் எப்படி ஓடக் கூடாது என்பதைக் கவனிப்போம்.

## I. நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன் (1கொரி. 9:26).

நாம் எந்த ஒரு செயலில் ஈடுபடும் பொழுதும், அதன் பலன், அதை செய்து முடிக்க நமக்குள்ள அறிவு, ஆற்றல், ஆகியவற்றைத் தெளிவாக அறிந்து, தீர்மானத்துச் செய்யும்பொழுது மட்டுமே நாம் அதில் தீவிரம் காட்டவும், வெற்றி பெறவும் முடியும். ஆவிக்குரிய விசுவாச ஓட்டத்திலும் இதுவே சரியாகும். ஆம், இது நீண்ட நெடிதான தொடர் ஓட்டமாகும். இரட்சிக்கப்பட்ட பின், மரணம் வரை ஓட வேண்டும். இந்நெடிய ஓட்டத்தில் களைப்பு, தடை, போராட்டம் இருக்கும் என்பதை

முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அதே சமயம் நம் விசுவாச ஓட்டத்தைத் துவக்கினவரும் ஓட்டத்தை ஓடி முடிக்க பெலன் தருபவரும் இயேசுவே [ எபி.12:1] என்ற நிச்சயத்தோடு ஓடினால் வெற்றி பெறுவோம்.

பழைய ஏற்பாட்டில் யாக்கோபின் மகன் யோசேப்பு தன் 17 வயதில் சொப்பனத்தின் மூலம், தேவன் அவனை 11 சகோதரர்களுக்கும், பெற்றோர்களுக்கும் மேலாக உயர்த்துவேன் என்று வாக்குக் கொடுத்தார். யோசேப்பு அதைப் பிடித்துக் கொண்டு, தேவனால் நான் உயர்த்தப்படுவேன் என்ற நிச்சயத்தோடு 13 ஆண்டுகள் ஓடிக் கொண்டேயிருந்தான். அவனுக்குத் தடையாய் முன் நின்ற குழியோ, அடிமைத்தனமோ, சகோதரர்களின் வஞ்சனையோ, வீண் பழியோ, சிறைச்சாலையோ, நன்றியில்லா மக்களோ அவன் ஓட்டத்தைத் தடை செய்ய முடியவில்லை. இவைகளில் இவன் பயப்படவோ, தளர்ந்து போகவோ இல்லை. தேவ வார்த்தையைக் குறித்த தெளிவோடும், பெற்றுக்கொள்வேன் என்ற நிச்சயத்தோடும் விசுவாசத்தில் உறுதியாய் ஓடிக்கொண்டேயிருந்தான். தன் 30-வயதில் அடிமை அதிபதியாக உயர்த்தப்பட்டான். வாழ்நாள் முழுவதும் அதிபதியாக திருப்தியாக வாழ்ந்தான். ஆம், தேவன் தன் வாக்கை நிறைவேற்றினார். நம் விசுவாச ஓட்டத்திலும், அநேகத் தடைகள் நம் முன் நிற்கத்தான் செய்யும். ஆனால் **ஓடுங்கள்** என்றவர் தடைகளுக்கு மேலானவர் என்று விசுவாசியுங்கள். ஓட்டத்தின் முடிவில், **நல்ல போராட்டத்தைப் போராடினேன்; ஓட்டத்தை முடித்தேன்** என்று சொல்லவும் [2தீமோ. 4:7], **நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே எனக்காக வைக்கப்பட்டுள்ள நீதியின் கிரீடத்தை எனக்கு அளிப்பார்** என்ற நிச்சயத்தோடும் ஓடுவோம். இப்பொழுது சொல்லுங்கள், நான் நிச்சயில்லாதவனாக ஓடேன்.

**II. ஆயினும் நான் ஓடுகிறதும் ஓடினதும் வீணாகும்படி ஓடேன் (கலா. 2:2)**

இயேசு அழைத்தவுடன் எல்லாவற்றையும் விட்டு இயேசுவோடு கூடவே ஓடும்படித் தங்களை இணைத்துக் கொண்ட 12 பேரில் ஒருவன் தான் யூதாஸ் காரியோத். உலகமெங்கும் சுவிசேஷப் பணியை செய்யும் உன்னத நோக்கத்திற்காக அழைக்கப்பட்டவன். 31/2 ஆண்டுகள் தொடர்ந்து இயேசுவோடு ஓடினான். ஆனாலும் யூதாஸ் சரீர அளவில் முழுமையாய் ஒப்புக் கொடுத்திருந்தாலும், மன அளவில் இயேசுவுக்கு முழுமையான இடம் கெடாமல் அவன் மனதில், சாத்தான் [புகுந்தான்] புகும்படியாக [லூக்கா.22:3] இடம் கொடுத்து பண ஆசையில் வீழ்ந்ததால் அவன் ஓட்டம் தடைபட்டது. இதுவரை அவன் ஓடிய ஓட்டத்தின் பலனை அனுபவிக்க முடியாமல்

அனுபவிக்க முடியாமல் ஓட்டம் எல்லாம் வீணாய்ப் போயிற்று. அருமையானவர்களே! சுவிசேஷத்தால் அழைக்கப்பட்டு ஞானஸ்நானத்தின் மூலம் இயேசுவோடு இணைக்கப்பட்டு விசவாச ஓட்டத்தை ஓடிக்கொண்டிருக்கிற நாம், பிசாசின் வஞ்சக உபதேசத்திற்கும், உலக இச்சைகளுக்கும் இடம் கொடுத்து, நம் ஓட்டம் வீணாகும்படி அறிவீனமாய் நடந்து கொள்ளக்கூடாது. சபை மூலம் பாதுகாப்போடு ஓடுகிற நாம் சொல்லுவோம், நான் **ஓடுகிறதும், ஓடினதும் வீணாகும்படி ஓடேன்.**

**III. நீங்கள் நன்றாய் ஓடினீர்களே... உங்களுக்குத் தடை செய்தவன் யார்? என்று இப்படி ஒரு கேள்வி கேட்கும்படியாய் ஓடேன்.**

நம் ஓட்டம் தடைபடுவதால் நமக்கு மட்டுமல்ல, ஓடும்படி அழைத்த இயேசுவுக்கும் கனவீனத்தை ஏற்படுத்தும் என்பதை மறந்து விடாதீர்கள். இன்றும் அநேகர் மிக விருப்பத்தோடும் ஆர்வத்தோடும் விசுவாச ஓட்டத்தில் இணைந்து ஓடிக்கொண்டிருக்கிறோம். சில தூரங்கள் (சில வருடங்கள்) கடந்திருப்போம். ஆனால், நம் ஓட்டப் பாதையின் இருபுறமும், நம் ஓட்டத்தை தடைசெய்யும்படியாய் உலக உறவுகள், உயர்படிப்பு, உத்தியோகம், உல்லாசங்கள், திருமணம், பணம், பதவி, அரசு சலுகைகள் என்று நம் ஓட்டத்தைத் தடைசெய்யும் அநேக காரியங்கள் அணிவகுத்து நிற்கும். இப்பொழுது நம் பார்வை விசுவாசத்தை துவக்கினவரும், முடிக்கிறவருமான இயேசுவை நோக்கி இல்லாமல், அழிந்துபோகும் அற்ப காரியங்களை நோக்கி இழுக்கப்படுவதால் விசுவாசம் தடுமாறுகிறது. உலக ஆசை, கவலைகளால் ஓட்டம் தடைபடுகிறது. அன்பான விசுவாசியே! இது நியாயமா? அகிலத்தையும் படைத்தவர் உன்னோடு இருக்கிறார். இவைகௌல்லாம் உங்களுக்கு வேண்டடியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். உங்கள் தலைமையிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. (மத். 6:32,33). கேளுங்கள்! கொடுக்கப்படும் (மத்.7:7). ஓடுங்கள்... தடைகள் தகர்க்கப்படும். உங்கள் ஓட்டம் ஏன் தடைபட்டது? என்று ஒருவனும் கேட்காதபடி விசுவாசத்தோடு தடைகளைத் தாண்டி தேவனுடைய வாக்கை (வார்த்தையை) பிடித்துக் கொண்டு நன்றாய் ஓடுங்கள். **ஓட்டத்தை முடித்தேன்** என்று சொல்ல தேவ கிருபை உங்களோடிருக்கும். தடையில்லாத தொடர் ஓட்டத்தால் நம் தேவன் மகிமைப்படுவார். வேதத்தை நேசிக்கும் பாக்யவான்களே! எப்படி ஓடக்கூடாது என்று எச்சரித்த தேவன், எப்படி ஓட வேண்டும் என்று கூறும் ஆலோசனைகளையும் கவனிப்போம்.

**IV. நான் உமது கற்பனைகளின் வழியாக ஓடுவேன். (சங் 119:32)**

ஒருவன் மல்யுத்தம் செய்தாலும் சட்டப்படி செய்யவேண்டும் என்ற உலக நியதியை பவுல் கூறுகிறார். ஒருமுறை ஒலிம்பிக்கில், 1000 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் முதலில் வந்த வீரருக்கு பரிசு மறுக்கப்பட்டது. இது அந்த வீரருக்கு எவ்வளவு பெரிய அதிர்ச்சியாயிருந்திருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். காரணம் வீரர் பரிசு பெறுவதில் மட்டும் குறியாயிருந்ததால் தனக்கொன்று நியமிக்கப்பட்ட ஒரு களத்தின் மேல்

குறிவையாமல், ஓடுகளம் மாறியது கூடத் தெரியாமல் ஓடி வந்தார். அவர் ஓட்டத்தை முடித்து விட்டார். ஆனால் - நியமித்தப்படி ஓடாததால் பரிசை இழந்தார்.

இன்று கிறிஸ்தவ மத உலகிலும் இப்படியே! ஆம், நித்தியத்தை ஜீவ கிரீடத்தைப் பெற்றுவிட வேண்டும் என்ற பக்தி வைராக்கியத்தில் தேவ கற்பனைகளை மறந்து, விட்டு விலகி, சுயமாக, மனித கற்பனைகளின் படியும், லௌகீக ஞானத்தின் படியும் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களை எச்சரிக்கத்தான் இயேசு நியாயத்தீர்ப்பின் உண்மையை உவமையாய் மத். 7:22-28 வரை வெளிப்படுத்தியிருக்கிறார். (தயவு செய்து அடிக்கடி இப்பகுதியை வாசியுங்கள். ஆம் நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் இடதுபுறம் வலதுபுறம் சாயாமல் பொறுமையோடே ஓடவில்லை என்றால் (எபி. 12: 1) பந்தயப் பொருளையும் பரலோகத்தையும் இழந்து விடுவோம். இயேசு கூறுகிறார். **நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்கிறவனே... புத்தியுள்ள மனிதன் (மத்27:24). மேலும் IIயோவான் 9-ல் கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல** என்கிறார். எனவே அவருடைய கற்பனைகளின் வழியே (மட்டும்) ஓடுவோம். ஜெயம் பெறுவோம். ஜீவ கிரீடத்தைப் பெற்றுக் கொள்வோம்!

## V இச்சையடக்கத்தாடே ஓட வேண்டும் (1கொரி.9:25)

பொதுவாக பந்தயங்களில் வெற்றி பெற எல்லாவற்றிலும் இச்சையடக்கம் தேவை. ஆம் நெடிய தொடர் ஓட்டத்தில் சோர்வை, களைப்பை, பெலவீனத்தை உண்டாக்கும் கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமைகளை முற்றிலும் களைந்து போட வேண்டும். அப்பொழுது மட்டுமே வெற்றி நிச்சயம். நசரேய விரதத்திற்கென்று நியமிக்கப்பட்ட சிம்சோன் தன்னை சுத்தவானாய்க் காத்துக் கொள்ளாமல், தன் சரீரத்தைக் கண்களின் இச்சைக்கும், வேசித்தனத்திற்கும் ஒப்புக்கொடுத்தபடியால், அவனுடைய மாபெரும் வெற்றியுள்ள ஓட்டம் இடையிலேயே இடறி விழுந்து அழிந்துபோனது (நியா.13:14,15) அன்பானவர்களே! இப்பொல்லாத உலகில், **கிறிஸ்தவர்களாக** தேவன் நம்மை நியமித்திருக்கிறார். இந்த உன்னத விசுவாச ஓட்டத்தை ஓடி முடிக்க **இச்சையடக்கத்தோடே ஓட என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துவேன்** என்றும் 1கொரி. 9:25, என் ஓட்டத்தை சந்தோசத்தோடே ஓடி முடிப்பேன் என்றும் (அப். 20:24), 2தீமோ.4:7) உறுதி எடுப்போம். பக்தி வைராக்கியத்தோடு ஓடுவோம். **கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து.... ஓடினாலும் இளைப்படையார்கள்** (ஏசாயா 40: 31,30). சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தையும் பெருகச் செய்வார். ஓடுங்கள்..... ஓடுங்கள் உங்கள் ஓட்டத்தை தேவன் முடித்து வைப்பார்! உங்கள் வெற்றிக்கு என் வாழ்த்துக்கள்!! ஆமென்.

★

# உங்கள் பிள்ளைகள் ஆசீர்வாதமாய் இருக்க வேண்டுமா?

Bro K.பாண்டியன்

**தே**வனுடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக. இவ்வுலக வாழ்வில் நாம் பல கஷ்டங்கள் அனுபவித்தாலும் நம் பிள்ளைகள் நன்றாயிருக்க வேண்டும் என்பதே பெற்றோர் அனைவரின் விருப்பமாகும். அப்படி நம் பிள்ளைகள் மற்றும் நம் பிள்ளைகளுடைய பிள்ளைகளும் நன்றாயிருக்க வேதத்தில் தேவன் சில ஆலோசனைகளைக் கூறியிருக்கிறார். அதைக்குறித்து இக்கட்டுரையில் ஆராய்ந்து பார்க்க தேவன் நமக்குக் கிருபை செய்வாராக. சங்103:17 – ல் **கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள் மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது** என்று வாசிக்கிறோம். தேவனுடைய பிள்ளைகளுக்கு தேவனுடைய வார்த்தையே எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வாக உள்ளது என்று நாம் அறிந்திருக்கிறோம். ஒரு பெற்றோராய் நாம் பிள்ளைகளுடைய நலனில் அக்கரையாய் இருப்போமானால் முதலில் நாம் செய்ய வேண்டியது கர்த்தருக்குப் பயந்து நடப்பது ஆகும்.

மேற்கண்ட வசனப்பகுதி மனுஷனுடைய வாழ்நாள் புல்லின் பூவைப்போல் தற்காலிகமானது என்றும் அவனுடய ஆயுசு அவன் நினைப்பதை விட மிகவும் கொஞ்ச நாட்களாய் இருக்கிறது என்றும் எடுத்துக் காட்டுகிறது. ஆகவே, அந்தக் குறுகிய வாழ்நாட்காலத்தில் பணம், பொருள், பதவி இவைகளைத் தேடி ஓடுவதைக் காட்டிலும் நீ தேவனுக்குப் பயந்து நடந்து வந்தால், நீயும் உன் பிள்ளைகளுடைய பிள்ளைகளும் நன்றாயிருப்பீர்கள் என்பதே வேதம் நமக்குக் காண்பிக்கும் வெளிச்சமாகும். இப்போது நம் கேள்வி கர்த்தருக்குப் பயப்படுவது என்றால் என்ன? அதற்கு, **பிள்ளைகளே, வந்து எனக்குச் செவி கொடுங்கள்; கர்த்தருக்குப் பயப்படுதலை உங்களுக்குப் போதிப்பேன்** என்று அழைக்கிற தேவதாசன் தாவீதிடம் போவோம் வாருங்கள். சங்.34:11–14 இப்பகுதியில் முக்கியமாக நாவடக்கத்தைப் பற்றியும், தீமையை விட்டு விலகி நன்மை செய்யவும், சமாதானத்தைத் தேடி அதைத் தொடர்ந்துகொள் என்றும் அப்படிச் செய்வதே கர்த்தருக்குப் பயப்படுதல் என்றும் தாவீது போதிக்கிறார்.

அன்பான தேவ பிள்ளையே நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் ஒரு விஷயம் என்னவெனில் நம்முடைய நாவை அடக்காமல் நாம் நம்மை தேவபக்தியுள்ளவர்கள் என்று எண்ணிக் கொள்வதாகும். அது வீணானது என்று யாக். 1:26 – ல் வாசிக்கிறோம். எப்படி ஆராதனை தேவசித்தத்தின்படி இல்லாமல் மனுஷர் சித்தத்தின்படி இருந்தால் அது வீணான ஆராதனை என்று இயேசு கடிந்து கொண்டாரோ (மத்.15:9) அதுபோல, நம் நாவை நாம் தேவ ஆலோசனைப்படி பயன்படுத்தாதபோது நம்முடைய தேவபக்தியும் வீணாகிது. தேவன் நற்குல திராட்சை செடிகளை நட்டு அது நல்ல கனிகளைக் கொடுக்கும் என இஸ்ரவேல் ஜனங்களைப் பற்றிய ஏசாயா தீர்க்கதரிசியின் உரையில், அது எதிர்பாராத கசப்பான கனிகளைத் தந்ததாகக் காண்கிறோம். இப்போது தேவ பக்தியாய் இருக்கிற நாமும் நம் நாவை சரியாகப் பயன்படுத்தாமல் போனால் அது வீணான பக்தியாய் மாறிவிடும். ஆக, நாம் சொன்ன சொல் தவறாமல், மற்றவரைப் பற்றி அபாண்டமாகப் பேசாமல், தற்பெருமை பேசாமல், கெட்ட வார்த்தை மற்றும் பொய் போன்றவை நம் நாவில் புறப்படாமல் பார்த்துக் கொள்வதே தேவ பயமாக உள்ளது.

அதுபோல, தீமையை விட்டு விலகி சமாதானத்தைத் தேடுவதும் தேவபயம் என்று பார்க்கிறோம். யேசேப்பை போல பாவத்தை விட்டு ஓட தேவபயமே காரணமாக உள்ளது. சவுலைக் கொல்ல சூழ்நிலை வந்தும் எதிரியை மன்னித்து ஒதுங்கிய தாவீது தேவனுக்குப் பயந்து நடந்த ஒரு அருமையான சாட்சியாகும். கிறிஸ்துவின் போதனையில் சத்துருவை சிநேகிப்பதும் கைம்மாறு கருதாமல் கடன் கொடுப்பதும், எதிரிகளைச் சபிக்காமல் அவர்களுக்காக வேண்டிக்கொள்வதும் முக்கிய அம்சமாக உள்ளது. தேவனுக்குப் பயந்த ஆபிரகாம் லோத்தினிடம், நீ வலது பக்கம் போனால் நான் இடது பக்கம் போகிறேன் என்றது உலகத்துக்கு **கோழைத்தனமாகத்** தெரியலாம். ஆனால், தேவபயம் உள்ள கிறிஸ்தவன் விட்டுக்கொடுத்துப் போக வேண்டும் என்பதே கிறிஸ்துவின் உபதேசமாக உள்ளது. ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பத்திற்கும் இது பொருந்தும் என்பதை மறவாதிருங்கள்!

அவருடைய நீதி அவருடைய பிள்ளைகளின் பிள்ளைகளின்மீது இருக்கும். அவருடைய நீதி என்பது அவருடைய சபை வாழ்வுக்கு முன்னுரிமை கொடுப்பதும், கிறிஸ்துவுக்காக உறவுகளை இழப்பதும் நம்பிக்கைகளின் பிரயாசத்தினால், பொருளினால் தேவனை கனம் பண்ணுவதும் தேவனுடைய நீதியாய் இருக்கிறது. பொதுவாக மனிதன் தேவனிடம், பணம், பொருள், தீர்க்க ஆயுசு, எதிரிகளின் அழிவு போன்றவற்றையே வேண்டிக்கொள்ளுகிறார்கள். ஆனால்

அதையெல்லாம் தவிர்த்து ஞானத்தைக் கேட்ட சாலமோனை தேவன் பாராட்டினார். மதுபான வெறி கொள்ளாமல் ஆவிக்குரிய மனிதனாக வாழ்வது தேவனுடைய நீதியாக உள்ளது. தாவீது சொல்லுவதைக் கவனியுங்கள், நான் இளைஞனாய் இருந்தேன், முதிர்வயதுள்ளவனும் ஆனேன், ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதும் அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை [சங்.37:25].

பிள்ளைகளின் பிள்ளைகள் முதியோருக்குக் கிரீடமாக உள்ளனர். நாம் தேவனுக்குப் பயந்து நடக்கும் போது தான், தேவன் நம் சந்ததிகளை ஆசீர்வதிப்பார். பாவியின் ஆஸ்தி தன் பிள்ளைகளக்குச் சேராது என்று வாசிக்கிறோம் [நீதி. 13:22]. எப்படி யாக்கோபு, யோசேப்பு போன்றவர்கள் தேவனுக்குப் பயந்த வாழ்வு வாழ்ந்ததால் மரண காலத்தில் நம்பிக்கையோடே கானானைப் பற்றி பேசி மரித்தார்கள். பெரும் உபத்திரவத்தைக் கண்டும் தேவனை தூஷியாத யோபு தன் அந்திய காலத்தில் நாலு தலை முறையான பிள்ளைகளைக் கண்டு ஆசீர்வாதமாக வாழ்ந்தான் [யோபு 42:16]. எனவே, நாம் நம் பிள்ளைகளுக்குத் தேவனுடைய வசனத்தை சிறு வயதிலேயே போதித்து [உபா. 6:7] நடத்த வேண்டிய வழியில் நடத்தினால் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பார்கள் [நீதி.22:6]. விசுவாசத்தை உலகக் கல்வி தராது. மாறாக, தீமோத்தேயு பெற்றதைப் போல் குடும்பத்தில் தான் அதைப் பெற்றுக்கொள்ள முடியும் [2தீமோ.1:5]. எனவே, நாம் தேவனுக்குப் பயந்து நடப்போமானால் நம் சந்ததி ஆசீர்வாதமாய் இருக்கும். தேவ கிருபை நம் அனைவரோடு கூட இருப்பதாக!

## நாளும், நடப்பும்

- தகுதித் தேர்வுகளில் இட ஒதுக்கீடு முறை கூடாது
  - உச்சநீதி மன்றம்
- மழையளவு, இயற்கைப் பேரிடர் விரவரங்களை அறிந்துகொள்ள செல்லிடப்பேசிசெயலி அறிமுகம்
  - தமிழக அரசு
- மின்னணு குடும்ப அட்டகளை அனைத்து மாவட்டங்களிலும் அச்சிட ஒப்புதல்
  - தமிழக அரசு
- மே 22 -ல் விண்ணில் ஏவப்படுகிறது பிஎஸ்எல்வி சி - 46 ராக்கெட்
  - இஸ்ரோ
- IPL 2019 - க்கான கோப்பையை மும்பை இந்தியன்ஸ் அணி நான்காவது முறையாக வென்றது.







29.4.2019 - 3.5.2019 வரை காங்கேயம் கிறிஸ்துவின் சபையில் நடைபெற்ற VBS வகுப்புகளின்போது....











# எங்களது இதர வெளியீடுகள்


Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2018-2020
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2018 - 2020**






















சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

## திருமறை தியானம்

### தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.